விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-8943)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 10 வெள்ளிக்கிழமை (24.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 36

### தமிழர்களின் வாழ்வியலை பறைசாற்றும்

# சிவபூமி அரும்பொருட்காட்சியகம் நாவற்குழியில் நாளை திறப்பு

### அனைவரையும் பங்கேற்குமாறு கலாநிதி ஆறு.திருமுருகன் அழைப்பு





(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்களின் வரலாற்றையும் அவர்களின் பண்பாட்டுப் பாரம்பரிய வாழ்வியலையும் ஆவணப்படுத்தும் அரும்பொருட் காட்சியகம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் நாவற்குழியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழ் மண்ணில் முதன்முதலாக அமைக்கப்பட்ட இவ் அரும் பொருட்காட்சியகத்தின் மூலம் எம் முன்னோர்களின் வாழ்வியல் சிறப்புகளையும் அடையாளங்களையும் எம் இளம் சந்ததி அறியக்கூடியதான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் வாழ்வியல் தொன்மங்களைக் காப்பாற்றுவதற்கு ஓர் அரும்பொருட்காட்சியகம் இல்லை என்ற குறைபாடு இதன்மூலம் நீங்குவதாக அறிஞர்பெருமக்கள் கருத்துரைத்துள்ளனர்.

நாவற்குழி திருவாசக அரண்மனைக்கு முன் ▷23

### அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில்

## எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதியுடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்

### ஜனநாயக போராளிகள் கட்சி அறிவிப்பு

(வவுனியா)

ஜனநாயக போராளிகள் கட்சியானது எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதியுடன் போராளிகள் என்ற ரீதியில் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம் என ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களுடனான கலந்து ▷23

### முல்லைத்தீவு கொக்கிளாயில்

## தென்பகுதியைச் சேர்ந்த மீனவரின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய் வில்லுக்குளம் பகுதியில் நேற்று ஆணொருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. ▷23

## கைது நடவடிக்கையின்போது அனைவரையும் சமமாக நடத்துக

### பொலிஸாருக்கு ஜனாதிபதி மீண்டும் பணிப்பு

(கொழும்பு)

கைது செய்யப்படும் அனைவரையும் சமமாக நடாத்துமாறும் எந்தவித அழுத்தங்களுக்கும் கீழ்படியாது செயற்படுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதில் கடமை பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். எந்தவொரு கார ▷23

### ரிஷாட் பதியுதீனின்

## சகோதரர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் ▷23

## பளையில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு



(பளை)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டலாய் பிள்ளையார் கோவில் வளாகத்தில் பெருந்தொகையான வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளது. ▷23

## வல்வையில் இராணுவத்தால் வீடு ஒன்று நேற்று முற்றுகை

(கரணவாய்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள வீடு ஒன்று இராணு வத்தினரினால் முற்றுகையிடப்பட்டதில் அங்கிருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை வல்வெட்டித்துறை, ஆதி ▷23

## கிராமத்துக்கு ஒரு வீட்டுத்திட்டம் 12 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

### அங்கஜன் எம்.பி தெரிவிப்பு

யாழ்மாவட்டத்தில்கிராமத்துக்கு ஒரு வீட்டுத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 10 புதிய வீடுகளும் 20 திருத்த வீடுகளுக்குமாக 12 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்படுத்தலின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்திலுள்ள 435 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் குறித்த வீட்டுத்திட்டம் செயற்படுத் தப்படவுள்ளது.

இதன் பிரகாரம் 435 புதிய வீடுகளுக்கு சுமார் 6 லட்சம் ரூபாய்களும் 270 திருத்த வீடுகளுக்கு சுமார் 3 லட்சம் ரூபாய் களும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

### இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட

## எமது உறவுகள் எங்கே?

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஐ.நாவுக்கு மகஜர் அனுப்பி வைப்பு

(மன்னார்)

இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்பு யுத்தத்தின் போது அரச படைகளாலும், துணை இராணுவக் குழுக்களாலும் கைது செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள் மற்றும் யுத்தத்தின் இறுதி நாட்களில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்களை யுத்தம் முடிந்து 10 ஆண்டுகளாகியும் வெளிப்படுத்தப்படவில்லை என வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை ▷23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மர்ம உறுப்பை பெண்ணுக்குக் காட்டிய இராணுவ சிப்பாய் நையப்புடைப்பு

## வவுனியா நொச்சிமோட்டையில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் பெண் ஒருவருக்கு மர்ம உறுப்பை காட்டிய இராணுவ சிப்பாயை பொதுமக்கள் நைய ப்புடைத்த சம்பவம் ஒன்று நேற்று மதியம் இடம்பெற்றது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டதாக தெரி விக்கப்படும் பெண் தெரிவிக்கையில்,

குறித்த நபர் தனது வீட்டிற்கு முன்பாக வந்து சிறு நீர் கழித்ததுடன், மர்ம உறுப்பை காட்டி தன்னை அழைத்ததாகவும் தெரிவித்தார்.

பின்னர் தான் இன்னுமொருவருடன் சேர் நது குறித்த நபரை நோக்கி சென்ற போது அவர ஓடியுள்ளார்.

பின்னர் எமது உறவினர்கள் ஒன்று கூடி அவரிடம் விசாரித்த போது தான் இராணு வம் என்று தெரிவித்தார். பின்னர் தாம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாக பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார்.

குறித்த சம்பவத்தால் நொச்சிமோட்டை பாலத்திற்கு அருகே பதற்றமான சூழல் ஏற் பட்டதுடன், அங்கு ஒன்று கூடியவர்களால் குறித்த நபர் தாக்குதலிற்குள்ளாகியிருந்த மையும் குறிப்பிடத்தக்கது.

சம்பவ இடத்திற்கு சென்ற ஓமந்தை பொலி ஸார் குறித்த நபரை முச்சக்கரவண்டி ஒன் றில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

தான் இராணுவ முகாம் ஒன்றில் பணி யாற்றுவதாகவும் வேறோர் தேவை நிமித் தமே அப்பகுதிக்கு சென்றதாகவும் குறித்த நபர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-3,250,299)

# 5 கோடி ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களுடன்

## கட்டுநாயக்காவில் மூவர் கைது

(கொழும்பு)

5 கோடி ரூபா பெறுமதியான 5 கிலோ கிராமுக்கும் அதிகமான தங்கம் மற்றும் ஆபரணங்கள் கட்டுநாயக்க விமான நிலை யத்தில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் நேற்று காலை கைப்பற்றப் பட்டுள்ளது.

இதன்போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் தெமட்டகொட கிராண்ட்பாஸ் பகுதிகளை சேர்ந்த 28 வயதுடையவர்களாவர். மற்றுமொருவர், 13 வயதுடைய சிறுவன் என பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

குறித்த இரண்டு சந்தேக நபர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து நாட்டிற்கு வருகை தந்த ஒருவர் குறித்த தங்கத்தை வழங்கியுள்ளார்.

இந்த நிலையில், அவர்கள் விமான நிலையத்தின் வெளியேறும் பகுதியிலுள்ள மலசலகூடத்தில் வைத்து குறித்த தங் கத்தை, கேகாலையை சேர்ந்த 13 வய துடைய சிறுவனிடம் இருந்த பையில் இட்டு கடத்த முயற்சித்துள்ளனர்.

இந்த நிலையில், சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர். (ம-3)

# மருத்துவ பீட மாணவி கொலை

## சந்தேக நபருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிங்கள மாணவி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாயான சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக் குமாறு யாழ் நீதவான் நீதிமன்றம் உத் தரவிட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ் பண்ணைக் கடற்க ரையில் பட்டப்பகலில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சிங்கள மாணவியான ரோசினி ஹன்சனா வயது 29 கழுத்தறுக்கப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டார்.

இச் சம்பவத்தை அடுத்து குறித்த பெண் மாணவியைக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் செல்லும் நிலையில் அவரது கணவன் எனக் கூறப்படும் இராணுவச் சிப்பாயை அப்பகுதியில் நின்ற இளைஞர்கள் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந் நிலையில் குறித்த கொலைச் சந்தேக நபரான இராணுவச் சிப்பாயை நேற்றைய தினம் யாழ் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது குறித்த உத்தரவு வழங்கப்பட்டது. (ம-3,10,114)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS
சனி, ஞாயிறு
9.00 - 4.00
SLAcS
சனி, ஞாயிறு
9.00 - 4.00
சகல பரீட்சை களுக்குமான
IQ+GK
சனி, ஞாயிறு
9.00 - 1.00
T.P:0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் நகர்) (C-9049)

# குற்றப்புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர்

## 6 மணி நேரம் வாக்குமூலம்

(கொழும்பு)

குற்றப்புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர குற்றப்புலனா ய்வு பிரிவில் 6 மணி நேரம் வாக்கு மூலம் வழங்கிய பின்னர் வெளியேறியுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுப் பிரி வில நேற்று காலை முன்னிலையாகினார்.

ரஞ்சன் ராமநாயக்க மாதிவெலயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து கடந்த நான்காம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதன்போது பல இறுவட்டுக்கள் அவரின் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்டன. இதனை யடுத்து குற்றப்புலனாய்வு திணைக்கள முன் னாள் பணிப்பாளர் சானி அபேசேகர, பாரா ளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடிய விடயங்கள் தொட ர்பான குரல் பதிவுகள் அனைத்தும் பகிர ங்கமாகியிருந்தன.

இதனையடுத்து ஷானி அபேசேகர அண் மையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். மேலும் குறித்த தொலைபேசி உரையாடல் கள் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகியுள்ளமை குறி ப்பிடத்தக்கது. (ம-3)

# மரண அறிவித்தல்



## திருமதி சின்னையா சிவக்கொழுந்து

*ஆலங்குழாய் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா சிவக்கொழுந்து அவர்கள் நேற்று (23.01.2020) வியாழக்கிழமை காலமானார்.*

*அன்னார் அமரர்களான வீரசிங்கம் - தங்கம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற நாகமுத்து சின்னையா (கிளை முகாமையாளர் - ஐக்கிய வியாபார சங்கம்,யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற புவனமலர், சிவஞ்ஞானம்(நீர்வேலி) ஆகியோரின் சகோதரியும், சிவராணி, சிவதாசன், ஜெயதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் ஆறுமுகம் (காங்கேசன்துறை), சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும், அமரர் இராமலிங்கம், வசந்தாதேவி, சுசீலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதன்லால்(ஜேர்மனி), மீராலினி, நஜன் (ஆசிரியர்,யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), லக்ஷனா (சுவிஸ்), மயூரன்(பொறியியலாளர்-சவுதி அரேபியா), Dr.தாட்சாயினி (யாழ்.போதனா வைத்தியசாலை), நிறோயினி (ஆசிரியை - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), சைலஜன் (நிகழ்ச்சித் தயாரிப்பாளர்- IBC தமிழ்), துளசிகா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.01.2020) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.*

**தொடர்பு இல:**
**077 481 4600, 021 224 0453**

(9050)

**தகவல்:-**
**ஜெயதாசன்(மகன்)**



### அரச ஊழியர்கள் மீது அரசியல் ரீதியாக துன்புறுத்தல்

# ஜனாதிபதி ஆணைக்குழு குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

(கொழும்பு)

அரச ஊழியர்களை அரசியல் ரீதியாக துன்புறுத்திய அனைத்து வழக்குகளையும் மீள விசாரணை செய்ய மூன்று பேர்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது.

இந்த விசாரணை ஆணைக்குழுவில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தயா சந்திரசிறி ஜெயதிலக மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோ ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணை ஆணைக்குழுவுக்கு 2015 ஜனவரி 08 முதல் 2019 நவம்பர் 16 ஆம் திகதிகளுக்கிடையிலான காலகட்டத்தில் அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் அரச அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்களின் ஊழியர்கள், ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் சேவை தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது.

மேலும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணையம், குற்றவியல் புலனாய்வுத்துறை, இலங்கை பொலிஸ் துறையின் நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவு அல்லது இலங்கை பொலிஸ் துறையின் சிறப்புப் புலனாய்வு பிரிவு ஆகியவற்றின் மூலம் அரசியல் ரீதியில் பாதிப்புக்குள்ளான வழக்குகளை விசாரிக்கவும் இந்த ஆணையத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. (இ-7)

# ரஞ்சனின் குரல் பதிவுகள்; இறுவெட்டுக்கள் நாடாளுமன்றில் முன்வைக்கப்படவில்லை

## பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரஸ்ரீ விளக்கம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவால் குரல் பதிவுகள் அடங்கிய இறுவெட்டுக்கள் நாடாளுமன்றில் முன்வைக்கப்படவில்லை என பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரஸ்ரீ நேற்று மன்றில் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் உரையாற்றிய ரஞ்சன் ராமநாயக்க இறுவெட்டுக்களை மன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்திருந்தார். இது தொடர்பிலேயே பிரதி சபாநாயகர் நேற்று தனது அறிவித்தலை விடுத்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஒலிப்பதிவு செய்த பல்வேறு குரல் பதிவுகள் வெளியாகி சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டெங்கு நுளம்புகளை அழிக்க "வொல் பெச்சியா" பக்றீரியா

## பெப்ரவரி 17ஆம் திகதி அறிமுகம்

(கொழும்பு)

நாட்டிலிருந்து டெங்கு நுளம்புகளை முற்றாக ஒழிப்பதற்காக "வொல் பெச்சியா" எனும் பக்றீரியாவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அறிமுகப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்திருப்பதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அனுர ஜயசேகர தெரிவித்தார்.

இதற்கமைய முதற்கட்டமாக நுகேகொடை மற்றும் தெமட்டகொடை பகுதிகளிலுள்ள நுளம்புகளின் முட்டைகளுக்குள்ளேயே இந்த பக்றீரியா செலுத்தப்படவுள்ளது.

இந்த பக்றீரியாவை டெங்கு நுளம்புகளின் முட்டைகளுக்குள் செலுத்துவதன் மூலம் அவை டெங்கு வைரஸை கடத்தும் இயல்பை இழந்து விடுமென்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், டெங்கு நோயாளிகளின் அதிகரிப்புக்கான காரணம், கடந்த இரண்டு மாதங்களில் ஜனவரி மற்றும் டிசெம்பர் மாதங்களில் மாறிவரும் வானிலை முறைகள் மற்றும் மறைந்திருக்கும் செரோடைப் செயலில் இருப்பதாக (DENV3) தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை டெங்கு நோய்த்தாக்கத்துடன் அடையாளம் காணப்பட்ட ஒரு இலட்சத்து 4672 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும், கடந்த 10 ஆண்டுகளில் ஒப்பிடும்போது நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

டெங்கு காய்ச்சல் (DF) மற்றும் மிகவும் கடுமையான டெங்கு இரத்தக்கசிவு காய்ச்சல் (DHF) ஆகியவை நான்கு டெங்கு வைரஸ் செரோடைப்களால் (DENV1,DENV2, DENV3 & DENV4) உற்பத்தி செய்யப்படுகின்றன.

கடந்த 2017 ஆம் ஆண்டில் செரோடைப் வைரஸ் DENV2 இனால் ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 191 பேர் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு புதிய பணிப்பாளர்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக அம்பாறை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கனிஷ்க விஜேரத்ன நேற்று நியமிக்கப்பட்டார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன தனது பதவியை அண்மையில் இராஜினாமா செய்தார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அம்பாறை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கனிஷ்க விஜேரத்ன நியமிக்கப்பட்டார். (இ-7)

# லொறியுடன் மோதிய சிறைச்சாலை பேருந்து

## 3 அதிகாரிகள், 9 கைதிகள் காயம்

(அம்பன்பொல)

குருநாகல் - அம்பன்பொல பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.


கைதிகளை ஏற்றிச் சென்ற சிறைச்சாலை பேருந்தொன்று லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது.

இதில் 3 சிறைச்சாலை அதிகாரிகளும் 9 கைதிகளும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# வில்பத்து காடழிப்பு வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாதுகாக்கப்பட்ட வில்பத்து வனத்தை அழித்து சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களை அகற்றுவதற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.



கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மகிந்த சமயவர்த்தன முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டது. (இ-7)

## சம்மாந்துறையில் ஆயுதங்கள் மீட்பு சந்தேக நபர் கைது



(சம்மாந்துறை)

சம்மாந்துறையில் நேற்று அதிகாலை அதிகளவான ஆயுதங்கள் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே வீடொன்றில் இருந்து குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன. 2 துப்பாக்கிகள், 64 துப்பாக்கி ரவைகள், வெடிமருந்துகள் என்பன இதன் போது மீட்கப்பட்டன. (இ-7)

# அமைச்சர் விமல் அரசியலமைப்பை மீறியதுடன் சத்தியப்பிரமாணத்தையும் உதாசீனம் செய்தார்

## அவைத்தலைவர் சிவஞானம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)


அமைச்சர் விமல் வீரவன்ச அரசியலமைப்பை மீறியதுடன், அமைச்சராக பதவியேற்கும் போது எடுத்த சத்தியப்பிரமாணத்தையும் உதாசீனம் செய்துள்ளதாக வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாண சபையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, விமல் வீரவன்ச தமிழ் மொழியில் இருந்த பெயர்ப்பலகையை சிங்கள மொழியில் மாற்றியமை தொடர்பில்கேட்ட போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் பனம் பொருள் உற்பத்தி நிலைய பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்த போது, பிரதான மொழியாக தமிழ் மொழியும், இரண்டாம் மொழியாக சிங்கள மொழியும் பொறிக்கப்பட்டிருந்தது.

அதனை அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டிருந்த போது, அதில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் பின்னர், அவர் அந்தப் பெயர்ப் பலகையில் பிரதான மொழியாக சிங்களத்தையும், இரண்டாம் மொழியாக தமிழையும் பொறித்து மீண்டும் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டிருந்தார்.

வடகிழக்கு பிரதேசங்களில் அரச கரும மொழியாக தமிழ்மொழி அரசியலமைப்பில் இருக்கின்ற போதிலும், விமல் வீரவன்சவின்



இந்தச் செயற்பாடு பல தரப்பினரிடமும் விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது. இது தொடர்பாக அவைத் தலைவரிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது, அரசியலமைப்பின் பிரகாரம் வடகிழக்கு பிரதேசங்களில் தமிழ் மொழி அரச கரும மொழியாக இருக்கின்ற போது, அதை அமைச்சர் விமல் வீரவன்ச மீறியிருக்கின்றார்.

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் நடந்துகொள்வேன் என சத்தியப்பிரமாணம் செய்தபின்னர், அமைச்சர் அரசியலமைப்பை மீற முடியுமென்றால், சாதாரண மக்கள் மீறலாம் தானே. சாதாரண மக்கள் மீறினால் ஏன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு அமைச்சருக்கு அரசியலமைப்பில் உள்ள விடயங்கள் தெரிய வேண்டும். அதைத் தான் மீறுகின்றார் என்பதும் தெரிய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-101)

# சுரங்க லக்மலின் அதிரடிப் பந்துவீச்சில் சிம்பாவே அணியை வீழ்த்தியது இலங்கை

சிம்பாவே அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இலகுவான வெற்றியை பதிவுசெய்தது.




சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்.கொண்டுள்ள திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியானது சிம்பாவேயுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இத் தொடரில் ஹரேயில் ஆரம்பான முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து தனது முதல் இன்னிங் ஸிக்காக 358 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸுக் காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அஞ்சலோ மத்தியூஸின் இரட்டைச் சதத்து டன் மொத்தமாக 9 விக்கெட்டுக்களை இழந்து 515 ஓட்டங்களை குவித்து டிக்ளே செய்தது.

இதன் மூலம் 157 ஓட்ட ங்களினால் பின் தங் கியிருந்த சிம்பாவே அணி நேற்றுமுன் தினமே தனது இரண்டாவது இன் னிங் ஸை ஆர ம்பித்தது.

அதன்படி நேற்று முன்தினம் போட்டியின் நான்காம் நாள் முடிவில் சிம்பாவே அணி 17 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களை பெற்றது.

இந் நிலையில் போட்டியின் ஐந்தாம் நாளான நேற்றைய தினம் சிம்பாவே அணியினர் இலங்கை அணியின் பந்து வீச்சுகளுக்கு தாக்குப் பிடித்தாடி தொடரை சமப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் இலங்கை அணியின் சிறப் பான பந்து வீச்சுக் காரணமாக சிம்பாவே அணியினர் ஐந்தாம் நாள் முடிவின் இறுதிப் பொழுதில் 92 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

சிம்பாவே அணி சார்பில் பிரண்டன் டெய்லர் 38 ஓட்டங்களையும், அணித தலைவர் சோன் வில்லிய ம்ஸ் 39 ஓட்டங்களை யு ம அதிகபடியாக பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் சுரங்க லக்மல் 4 விக்கெட்டுக்களையும், லஹிரு குமார 3 விக்கெட்டுக்களையும், லசித் எம்புல் தெனிய 2 விக்கெட்டுக்களையும், கசூன் ராஜித ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் இலங்கை அணிக்கு வெற் றியிலக்காக வெறும் 14 ஓட்டத்தை மாத்திரம் சிம் பாவே அணியினரால் நிர்ணயிக்க முடிந்தது.

14 ஓட்டம் என்ற இலகுவான வெற்றி யிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட ஆரம்பி த்த இலங்கை அணி சார்பில் ஆரம்ப வீரர்களாக ஓசத பெர்னாண்டோ மற்றும் திமுத் கருணாரத்ன களமிறங்கி 3 ஓவர் களை மாத்திரம் எதிர்கொண்டு வெற் றியிலக்கை அடைந்தனர்.




## நியூசிலாந்து - இந்தியா ரி20 இன்று; பழி வாங்கும் எண்ணம் இல்லை -கோலி

நியூசிலாந்து அணியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணமே தோன்றாது என இந்திய அணியின் தலைவர் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

இந்திய நியூசிலாந்து அணிகளிற்கு இடையிலான முதலாவது ரி20 போட்டி இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் விராட் கோலி இதனை தெரிவித்துள்ளார்.

உலககிண்ண தொடரின் அரையிறு தியில் நியூசிலாந்து அணி இந்திய அணியை தோற்கடித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கருத்துவெளியிட்டுள்ள விராட்கோலி நியூசிலாந்து அணியினர் மிகவும் நல்லவர்கள் அவர்களை பழி வாங்கவேண்டும் என நினைத்தால் கூட அந்த மனோநிலை வராது என குறிப்பிட்டுள் ளார்.

நியூசிலாந்து அணியினருடன் நாங்கள் சிறந்த முறையில் பழகுவோம் என குறிப்பிட் டுள்ள விராட்கோலி களத்தில் மோதுவது குறித்தே நாங்கள் கவனம் செலுத்துகின் றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் அணிகளிற்கு முன்னுதாரண மாக திகழ்ந்துள்ள அணி நியூசிலாந்து மாத் திரமே என விராட்கோலி குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு பந்திலும், ஒவ்வொரு போட்டி யிலும் நியூசிலாந்து வீரர்கள் தங்கள் முழு திறமையையும் வெளிப்படுத்த முயல்வார் கள். அவர்களது உடல்மொழி தீவிரமான தாகயிருக்கும் ஆனால்அவர்கள் மோசமான வர்கள் இல்லை.ஆடுகளத்தில் ஏற்றுக்கொள் ளப்படாத விடயங்களை அவர்கள் செய்வ தில்லை.இது பழிவாங்கல் தொடர்பானது இல்லை. இது இரு சிறந்த அணி கள் மோதுவது தொடர்பானது. நியூ சிலாந்தை தோற்கடிப்பது சவா லான விடயம் அதற்கு நாங் கள் தயாராகயுள்ளோம்.

சொந்த மண்ணில் அவர் கள் விளையாடுவது சற்று சாதக மாக இருந்தாலும், நாங்கள் நியூசிலாந்து மண்ணில் அதி கமான போட்டிகளில் விளை யாடியுள்ளோம். கடந்த முறை நாங்கள் இங்கே இரண்டு தொடர்களை யும் வென்றுள்ளோம். அதனால் நம்பிக்கையு டன் தொடரை எதிர் கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்துள் ளார்.




### 19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ண கிரிக்கெட்

## இலங்கை அணி முதல் சுற்றுடன் பரிதாபமாக வெளியேற்றப்பட்டது

2020 ஆம் ஆண்டுக்கான 19 வயதுக் குட்பட்ட இளையோர் சர்வதேச ஒருநாள் கிரக்கெட் தொடரிலிருந்து இலங்கை அணி வெளியேறியுள்ளது.

16 அணிகள் பங்கேற்றுள்ள 13 ஆவது இளையோர் ஒருநாள் உலக கிண்ணத் தொடர தென்னாபிரிக்காவில் நடந்து வருகிறது.

இதில், ஏ.பி.சி.டி. என நான்கு குழுக்கள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறுகின்றன. ஒரு குழுவில் நான்கு அணிகள் இடம் பெற்றுள்ளன.

இந்த குழுவில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள், காலிறுதிக்கு தகுதி பெறும்.

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குழு ஏ யின் லீக் ஆட்டம் ஒன்றில் இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகள் மோதின.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர் ணயிக்கப்பட்ட 50 ஓவ ர்கள் முடிவில் 9 விக் கெட்டுக்களை இழந்து. 242 ஓட்டங்களை குவித்தது.

இலங்கை அணி சார்பில் அஹான் விக்ரமசிங்க 64 ஓட்டங்களையும், சோனல் தினுஷ 46 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர். இதன் பின்னர் 243 என்ற வெற் றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய நியூஸிலாந்து அணிக்கு இறுதி 2 பந் துகளுக்கு 6 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலை வந்தது.

நியூஸிலாந்து வீரர் கிறிஸ்டியன் கிளார்க் 49.5 ஆவது பந்தில் சிக்ஸரை விளாசி இலங்கை அணியின் வெற்றி வாய்ப்பினை தட்டிப் பறித்தார். இதன் மூலம் இலங்கை அணி லீக் சுற்றில் தொடர்ந்து 2 ஆவது தோல்வியைத் தழுவி யமையினால் அடுத்த சுற்றான காலிறுதிக்கான வாய்ப்பினை நழுவ விட்டது.

இலங்கை அணி நாளை நடைபெறும் போட்டியில், ஆறு தல் வெற்றிக்காக ஜப்பான் அணியை எதிர கொள் ளவுள்ளது.



# யாழ்.மாவட்டத்தில் நிறைவான கிராம வேலைத்திட்டத்தின் கீழ் 870 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் 689 வீதிகள் புனரமைப்பு

## அங்கஜன் எம்.பி.தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் 870 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் 689 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிறைவான கிராமம் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.



நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பிரிவில் ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 9 வீதிகளின் புனரமைப்புக்களுக்காக 12 மில்லியன் ரூபாயும் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் 30 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 40 வீதிகளுக்காக 60 மில்லியன் ரூபாயும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகப் பிரிவில் 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 26 வீதிகளுக்காக 30 மில்லியன் ரூபாயும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 10 வீதிகளுக்காக 18 மில்லியன் ரூபாயும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 48 வீதிகள் புனரமைப்புக்காக 56 மில்லியன் ரூபாயும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 40 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 77 வீதிகள் புனரமைப்புக்காக 80 மில்லியன் ரூபாயும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 35 வீதிகள் புனரமைக்க 56 மில்லியன் ரூபாயும் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 37 வீதிகள் புனரமைக்க 50 மில்லியன் ரூபாயும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 30 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 60 வீதிகள் புனரமைக்க 60 மில்லியன் ரூபாயும் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 64 வீதிகள் புனரமைக்க 90 மில்லியன் ரூபாயும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 54 வீதிகள் புனரமைக்க 62 மில்லியன் ரூபாயும் சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 79 வீதிகள் புனரமைக்க 120 மில்லியன் ரூபாயும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 35 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 55 வீதிகள் புனரமைக்க 70 மில்லியன் ரூபாயும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 35 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 55 வீதிகளுக்கு 70 மில்லியன் ரூபாயும் மற்றும் மருதங்கேணிப் பிரதேச, செயலர் பிரிவில் 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 30 வீதிகளுக்காக 36 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## யாழ்.சர்வதேச வர்த்தகச் சந்தை இன்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இவ்வர்த்தக சந்தை நாளை மறுதினம் 26 ஆம் திகதி வரை நடைபெறும். (இ-7)

## இன்று சர்வதேச கல்வித்தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கல்வித் தினத்தை முன்னிட்டு சர்வதேச கல்வியகமும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் சர்வதேச கல்வித்தின நிகழ்வுகள் இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக மத்திய கல்வி அமைச்சின் செயற்றிட்டப் பணிப்பாளர் க.பரமானந்தன் கலந்து கொள்வார். (இ-5)

## கோப்பாய் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கும் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கும் தீர்மானம் வலி.கிழக்குப் பிரதேச சபையில் ஏகமனதாக நிறைவேறியது.

வலி.கிழக்குப் பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்த அமர்வில் உறுப்பினர் இ.மயில்வாகனம் முன்வைத்த பிரேரணையே சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகமானது 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி செம்மணியில் தொண்டைமானாறு அக்கரை வரையான 102 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேச மாகக் காணப்படுகிறது.

இதன் காரணமாக அச்சுவேலியில் இருந்து நீர்வேலிச் சந்தியின் ஒரு பகுதிவரை ஒரு தனியான பிரதேச செயலகமாகவும் நீர்வேலிச் சந்தியின் தெற்கு எல்லையில் இருந்து நாயன்மார்கட்டு ஜே/257 வரை பிறிதொரு பிரதேச செயலகமாகவும் வரை யறை செய்யப்பட வேண்டும் என்ற தீர் மானமே நேற்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ-10)

## யாழ்.மாநகரசபை முன்பாக சுகாதாரத் தொழிலாளர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர். நிரந்தர நியமனம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ-10)



# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## நோய் தீர்க்கும் ஸ்ரீரங்கநாதர்



ஜோதிடத்தில் நோயைக் குறிக்கும் பாவம் ஆறாம் பாவமாகும். ஒரு குறிப்பிட்ட பாவத்திற்கு ஏழாம் பாவம், அந்த குறிப்பிட்ட பாவத்திற்கு நிவர்த்தி பாவமாகும். அதன்படி ஆறாம் பாவத்திற்கு நிவர்த்தி பாவம் பன்னிரண்டாம் பாவமாகும். (ஆறாம் பாவத்திற்கு ஏழாம் பாவம் பன்னிரண்டாம் பாவமாகும்) ஆறாம் பாவம் நோய் என்றால் பன்னிரண்டாம் பாவம் மருந்தாகும்.

காலப்புருஷ லக்னமான மேசத்திற்கு ஆறாமிடம் கன்னி இராசியாகும். கன்னி இராசிக்கு ஏழாமிடம் மீன இராசியாகும். காலப்புருஷ லக்னமான மேசத்திற்கு பன்னிரண்டாமிடம் மீன இராசியாகும். மீன இராசி கடல் இராசி எனப்படும். மீனத்தில் புதன் கிரகம் நீச்சமடைகிறது. புதனுக்கு புத்திகாரகன் என்று பெயர்.

பன்னிரண்டாமிடம் தூக்கத்தைக் குறிக்கும். ஒருவர் தூக்கத்திலிருக்கும் போது புத்தி வேலை செய்யாது, இதைக் குறிக்கும் விதமாக புதன் மீனத்தில் நீச்சமடைகிறார். புதனின் அதிதேவதை விஷ்ணுவாகும். நீச்ச புதன் நித்திரையிலிருக்கும் விஷ்ணுவைக்குறிப்பார். அதாவது மீன இராசி பாற்கடலைக் குறிக்கும் அதில் நீச்சமடையும் புதன் நித்திரையிலிருக்கும் விஷ்ணுவைக்குறிக்கும்.

மீனத்தில் உச்சமடையும் சுக்கிரன் விழிப்பு நிலையிலிருக்கும் லக்ஷமியைக் குறிக்கும். அதாவது மீன இராசியானது சயன கோலத்திலிருக்கும் விஷ்ணு பகவானை குறிக்கிறது.

ஸ்ரீரங்கநாதர் சயன கோலத்திலிருப்பவராகும். இவர் காலப்புருஷ லக்னமான மேசத்திற்கு பன்னிரண்டாம் இராசியான மீன இராசிக்கு தேவதையாவார். பன்னிரண்டாம் பாவம் மருந்து, மருத்துவர், வைத்தியசாலை இவைகளைக் குறிக்கும்.

எனவே நோய் நொடிகளிலிருந்து விடுபட விரும்புபவர்களும் மருத்துவ தொழில் செய்ய விரும்புபவர்களும் ஸ்ரீரங்கநாதரை வழிபட்டு வந்தால் நோய் விரைவில் குணமாகும். மருத்துவத் தொழில் சிறப்பாக நடக்கும். மருத்துவர்கள் ஸ்ரீரங்கநாதரை வழிபட்டு வந்தால் சிறந்த மருத்துவர், கைராசியான மருத்துவர் எனப் பெயரெடுக்கலாம். வைத்தியசாலைகளில் ஸ்ரீரங்கநாதரின் படத்தை மாட்டி வைத்தால் அந்த வைத்தியசாலை நல்ல வைத்தியசாலை என பெயரெடுக்கும்.

சயன கோலத்திலிருக்கும் விஷ்ணு பகவானை எந்த ஆலயத்தில் தரிசித்தாலும் நோய்க்கு நிவாரணம் விரைவில் கிடைக்கும்.

# யாழ். அறிவுத்திருக்கோவிலில் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு பஞ்சபூத நவக்கிரக தவம்

(யாழ்ப்பாணம்)

இன்று வெள்ளிக்கிழமை திருக்கணித பஞ்சாங்கத்தின் படி சனிப்பெயர்ச்சி நடைபெறவுள்ளது. இதனையொட்டி யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் பஞ்சபூத நவக்கிரகதவம் அதிகாலை 5.30 மணி முற்பகல் 10 மணி மற்றும் மாலை 4 மணிக்கும் பேராசிரியர் பானுமதியால் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நீதிமன்றின் பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட சான்றுப்பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2020.03.23 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 431(2) இன் பிரகாரம் பகிரங்கப் படுத்தப்படுகின்றது என பதிவாளர் அறிவித்துள்ளார்.

மன்றின் கட்டளைப்படி சான்றுப்பொருள் விபரம்,

வழ.இலக்கம்- B/749/PC/16/MC/504/PC/17. சான்றுப் பொருள்இல-PR/104/16 சான்றுப் பொருள் விபரம்- NP WO -4995 இலக்க கீரோசிம் மோட்டார் சைக்கிள்.

வழ.இலக்கம்- B/1200/15. சான்றுப்பொருள் இல- PR/75/15. சான்றுப்பொருள் விபரம்:- NP BBI-6778 இலக்க சிவப்பு நிற அப்பாச்சி மோட்டார் சைக்கிள்,

வழ.இலக்கம்- B/454/11. சான்றுப்பொருள் இல- PR/53/12. சான்றுப்பொருள் விபரம்- அடிச்சட்ட இல 17AA117272 சவாரி 49CC வர்க்க மோட்டார் சைக்கிள்,

வழ.இலக்கம்- B/577/S/18. சான்றுப்பொருள் இல - PR/780/18. சான்றுப்பொருள் விபரம் - NP RW - 1551 இலக்க உழவி யந்திரப் பெட்டி என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

# இந்தியக் கலைக்குழுவினரின் கலை நிகழ்வுகள் யாழில்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் குடியரசு நாளின் 70ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயத்தின் ஆதரவுடன் இந்தியக் கலைக்குழுவினர் வழங்கும் கலை நிகழ்வுகள் நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதி, சோழா அரங்கில் நடைபெறும். (இ-5)

# பயிலுநர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தில் பயிலுநர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கான வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை அந்தந்த கிராம உத்தியோகத்தர் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதனைப் பூர்த்தி செய்து அவர்களிடமே ஒப்படைக்குமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# இராசி பலன்

**24.01.2020**

தை 10, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
அமாவாசை பின்னிரவு 3.35மணிவரை
உத்தராடம் பின்னிரவு 3.17 மணிவரை
சுபநேரம் 6.36-8.06 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை
தை அமாவாசை விரதம்

முடியும் என்று நம்புபவன்
முடித்துக்காட்டுவான்
வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக் | இராசி பலன் | | |
| சூரி புத | கிரகநிலை | | |
| சனி, குரு கேது, சந் | செவ் | | |

சந்திராஷ்டமம் மிருகசீரிடம்

**மேடம்:** தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், இனிமையான நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**இடபம்:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர் செலவுகள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கடகம்:** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென் வருகை தரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம், அரசு வழியில் சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்:** நம்பி வந்தவர்களுக்கு உதவும் எண்ணம் உருவாகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்:** [illegible] நிலை ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்:** இறைவழிபாட்டில் நாட்டம் செல்லும், பணப்புழக்கம் அதி கரிக்கும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், [illegible]

**மீனம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர், இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932/021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 24.01.2020ஆம் திகதி முதல் 06.02.2020ஆம் திகதி வரை மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 1000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 07.02.2020 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million without VAT | Grade | Contract Period | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/K/RDHS/B/PSSP/ 2020/01 | Construction of Kitchen at DH Tharmapuram | 2.723 | C8 and C7 | 2 Month | 1000.00 | 27000.00 | 05/05/2020 |
| 02 | NP/K/RDHS/B/PSSP/2020/02 | Construction of Kitchen at DH Poonagary | 2.723 | C8 and C7 | 2 Month | 1000.00 | 27000.00 | 05/05/2020 |
| 03 | NP/K/RDHS/B/PSSP/2020/03 | Construction of Kitchen at DH Veravil | 2.723 | C8 and C7 | 2 Month | 1000.00 | 27000.00 | 05/05/2020 |
| 04 | NP/K/RDHS/B/PSSP/2020/04 | Construction of Waste Segregation at DH Uruthirapuram | 0.611 | C9 and C8 | 1 Month | 500.00 | 6000.00 | 05/05/2020 |
| 05 | NP/K/RDHS/B/PSSP/2020/05 | Construction of Waste Segregation at DH Veravil | 0.611 | C9 and C8 | 1Month | 500.00 | 6000.00 | 05/05/2020 |
| 06 | NP/K/RDHS/B/PSSP/2020/06 | Improvement of BME Unit at RDHS Office | 1.892 | C9 and C8 | 2 Month | 1000.00 | 19000.00 | 05/05/2020 |

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.

(C-9041)


யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)



The Jaffna Co-operative Stores Ltd

100 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும்

1918–2018

காலம்:- 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- காலை 9.30 மணி
இடம் :- கேட்போர் கூடம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகம்

பங்குதாரர்களும் முன்னைய நாள் ஊழியர்களும் நலன்விரும்பிகளும் யாபேரும் வருகைதந்து விழா வினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(1971)

530, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்கள்,
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்.



அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்

ஒரு நற்செய்தி மண்டபம் இலவசம்

01.02.2020 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது. குளிர்பானம், ஐஸ்கிறீம், தண்ணீர் போத்தல், பூந்தி லட்டு, வடை, பாயாசத்துடன் சாப்பாடு , முகப்பு வாழைக்குலை, திருமணத்திற்கான கிரியை பொருட்கள் அடங்கலாக குருக்கள், மேளதாளத்துடன் கட்டணம் ஒருவருக்கு ரூபா 400 மட்டுமே.

❖எம்மிடம் வீடியோ, போட்டோபடம் பிடிப்பவர்களுக்கு வெளி நாட்டில் இலவசமாக பார்ப்பதற்கு (இன்ரநெற்) வசதியும் உள்ளது.
❖வேறு வீடியோ, போட்டோ படப்பிடிப்பிற்கு அனுமதிக்கப்படும்.
❖அகன்ற வாகன தரிப்பிடம் உண்டு.

"உங்கள் திருப்தியே எங்கள் சேவை"

(3910)

இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்,
வீடியோ கலாமினி அச்சுவேலி.
077 305 3080



பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-9024)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


### பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு சரஸ்வதி முன்பள்ளியின் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் முகாமைத்துவக் குழுத் தலைவர் சு.வைகுந்தநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் க.கிரிதரன், சிறப்பு விருந்தி னர்களாக தேசோதய அமைப்பின் இணைப்பாளர் சி.யுகேந்திரா, தேசாபிமானி இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# தமிழ் மக்களின் பாரம்பரிய வரலாற்றிற்கும் பண்பாட்டிற்கும் புதிய முகவரியை தேடித்தந்திருக்கும் சிவபூமி அருங்காட்சியகம்

யாழ்ப்பாண நுழைவாயிலான நாவற்குழியில் நாளை 25.01.2020 திறந்து வைக்கப்படும் சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகத்தின் ஆரம்ப நிகழ்வை ஈழத்தமிழர் வரலாற்றில் நிரந்தரமாக இடம்பெறப்போகும் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகப் பார்க்கிறேன். இவ்வருங்காட்சியகத்தின் மூலம் எம் சந்ததியினரால் வளர்க்கப்பட்டு எம்மோடு வாழ்ந்து வரும் பாரம்பரிய மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல் அடுத்துவரும் சந்ததியினருக்கு கையளிப்பதற்கு வழியேற்படுத்தப்பட்டிருக்கின்றது. மூன்று தளங்களில் அமைக்கப்பட்ட இவ்வரும் பொருள் காட்சியகத்தில் வட இலங்கை மக்களின் பூர்வீக வரலாற்று அடையாளங்கள், மரபுரிமைச் சின்னங்கள், பயன்பாட்டிலிருந்து மறைந்துபோகும் பாரம்பரிய பாவனைப் பொருட்கள், தமிழ் மக்களின் கடந்தகால வரலாற்றையும் பண்பாட்டையும் வெளிச்சம் போட்டுக் காட்டும் புகைப்படங்கள், ஓவியங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட உள்ளன. இவற்றைப் பார்வையிடுவோருக்கு எமது சந்ததியினர் எங்கிருந்து வந்தார்கள், எங்கே போகின்றார்கள், எங்கே போக வேண்டும் போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடை காண வழி பிறந்துள்ளது. இந்த அருங்காட்சியகம் தமிழ் மக்களின் விலை மதிக்க முடியாத சொத்து மட்டுமல்லாமல் அதை தூரநோக்குடன் கடின உழைப்பால் உருவாக்கித் தந்த கலாநிதி ஆறு.திருமுருகன் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சொத்தாகும்.



தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்படுவதற்கு ஒரு முழுமையான அருங்காட்சியகம் வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கனவாகும். 1971 இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் கந்தரோடையில் மண்ணுக்குள் புதையுண்டிருந்த பல நூற்றுக்கணக்கான தொல்பொருட் சின்னங்கள் வெளிவந்தன. அவற்றைப் பார்வையிட்ட அன்றைய அரச அதிபர் போல் பீரிஸ் அநுராதபுரத்திற்கு அடுத்த புராதன நகரம் கந்தரோடை எனக் குறிப்பிட்டு இம் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க தமிழர் ஒருவரைத் தொல்லியல் ஆணையாளராக நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். 1940 ஆம் ஆண்டுக்குரிய பிரித்தானியர் கால ஆவணத்தில் சாவகச்சேரி பழைய நீதிமன்றத்தின் கீழ் புதையுண்டிருந்த புராதன ஆலயத்தின் அழிபாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திக் காட்டியது. இலங்க்க சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டெழுந்த பத்திரிகைள், தமிழர்களின் மரபுரிமைகள் கவனிப்பாரின்றி அழிவடைந்து வருகின்றன. பணத்திற்காக அவை பிற இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும் என அறைகூவல் விடுத்தன.

இந்நிலையில் 1970 களில் பேராசிரியர் கா.இந்திரபாலா, வி.சிவசாமி, ஆ.சிவனேசச்செல்வன் ஆகியோரின் முயற்சியால் யாழ்ப்பாணத் தொல்லியற் கழகம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அவ்வமைப்பில் ஆர்வத்துடன் இணைந்து கொண்ட ஆசிரியர்களான பொன்னம்பலம், திருவள்ளுவர், நில அளவையாளர் சேயோன், பூநகரி உதவி அரசாங்க அதிபர் கிருஷ்ணமூர்த்தி, கலைஞானி, குரும்பசிட்டி கனகரட்ணம் போன்ற பெரியவர்கள் தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிவதிலும் பாதுகாப்பதிலும் ஆர்வத்துடன் பணியாற்றினர். அவர்களின் கண்டுபிடிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு பல்கலைக்கழக மட்டத்திலும் சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. ஆயினும் மரபுரிமைச் சின்னங்களைச் சேகரித்த பலர் இன்று அமரத்துவம் அடைந்து விட்ட நிலையில் அம்மரபுரிமைச் சின்னங்களுக்கு என்ன நடந்ததென்பதை யாருமே அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. 2009 இற்குப் பின்னர் முன்பொரு போதும் இல்லாத அளவிற்கு வட இலங்கை மரபுரிமைச் சின்னங்கள் தென்னிலங்கைக்கும் பிற நாடுகளுக்கும் கடத்தப்பட்டு வருகின்றன.



இதற்காக 2010-2011 காலப் பகுதியில் தென்னிலங்கை வர்த்தகர்கள் தனியார் வீடுகளை வாடகைக்கு எடுத்து வீடு வீடாகச் சென்று குறைந்த விலையில் மரபுரிமைச் சின்னங்களைக் கொள்வனவு செய்த சம்பவங்களும்உண்டு. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட மரபுரிமைச் சின்னாங்கள் இன்றும் அநுராதபுரம், பொலநறுவை, கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் உள்ள கடைகளில் வெளிநாட்டவருக்கு உரிய விற்பனைப் பொருட்களாக உள்ளன. கடந்த வாரத்தில் வட இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு கடத்தப்பட இருந்த இரு கோடி ரூபா பெறுமதியான மரபுரிமைச் சின்னாங்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் வெளிவந்தன.

இவ்வாறு எமது இனத்தின் மூல வேர், இன, மத அடையாளங்கள், பாரம்பரிய பண்பாட்டுச் சின்னங்கள் எம் கண் முன்னேயே கடத்தப்பட்டும், அழிவடைந்தும் வருவதை எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கெல்லாம் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வும் அவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியிடம் கையளிப்பதற்கான அருங்காட்சியகங்கள் இல்லாதிருப்பதுமே முக்கிய காரணங்களாகும். இவற்றைச் செய்து கொடுக்க அரச அமைப்புக்களோ, பொது நிறுவனங்களோ முன்வரவில்லை. தென்னிலங்கையைப் போல் இங்குள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இவற்றைச் செய்வதில் அதிக அக்கறை காட்டி வருவதாகவும் தெரியவில்லை. இதனால் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து எமது மரபுரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் மக்கள் மத்தியில் ஒரு கனவாகவே இருந்து வந்துள்ளது. ஆயினும் தற்போது அந்தக் கனவுக்கு சிவன் அருள் கிடைத்து விட்டது. அது தனிமனிதனாக இருந்து அல்லும் பகலும் உழைத்த கலாநிதி ஆறு.திருமுருகன் வடிவத்தில் கைகூடியுள்ளது. அதுவே நாவற்குழியில் தலை நிமிர்ந்து நிற்கும் சிவபூமி அரும் பொருள் காட்சியகமாகும்.

அரும்பொருள் காட்சியகம் அமைக்கப்பட வேண்டும் என்பது கலாநிதி ஆறு.திருமுருகனின் திடீர் கனவு அல்ல. அவர் துர்க்கையம்மன் ஆலயத் தலைவராக பதவியேற்ற காலத்தில் இருந்து எமது மரபுரிமைச் சின்னங்களைச் சிறுகச் சிறுகச் சேமித்து வந்ததை நான் அறிவேன். அவை வலிகாமத்தில் மூன்று இடங்களில் பாதுகாக்கப்பட்டு வந்தன. ஆயினும் அதற்கொரு அருங்காட்சியகம் தோன்றும் என நான் கனவு காணவில்லை. அதனால் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணர்ந்து அம்மரபுரிமைச் சின்னாங்களை எமது தொல்லியல் இறுதி வருட மாணவியூடாக ஆவணப்படுத்தி வைத்துள்ளோம். அது தனியொரு நூலாகவும் விரைவில் வெளிவரவுள்ளது. அப்போது சிவபூமி அரும் பொருள் காட்சியகம் தோன்றிய வரலாற்றுப் பின்னணியும் தெரியவரும்.

இன்றைய உலகில் நேரம், பணச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு அங்குள்ள அருங்காட்சியகங்களுக்குச் செல்வதையே பெரிதும் விரும்புகின்றனர். தற்போது தமிழ் மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு புதிய வழி திறக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு பரப்பில் மூன்று தளங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகத்தின் கட்டட அமைப்பு, காட்சிப்படுத்தலில் பின்பற்றப்பட்டுள்ள ஒழுங்குமுறை, காட்சிப்படுத்தப்பட்டு வரும் வரலாற்றுச் சின்னாங்கள், சிலைகள், சிற்பங்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள், அவை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் என்பன அருங்காட்சியகத்தைப் பார்க்க வருபவர்களுக்கு இதுவரை தெரிந்திருக்காத தமிழர் பற்றிய புதிய வரலாற்றுச் செய்திகளை சொல்லப் போகின்றன.

அவற்றுள் திறந்த வெளி அருங்காட்சியகத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள தமிழ் மன்னர்களின் சிலைகள் பலரின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளன. இதுவரை எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்களுக்கே சிலை வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு 350 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்த 21 தமிழ் மன்னர்களுக்குச் சிலைகள் வைக்கப்படவில்லை. அக்குறைபாட்டைப் போக்கும் வகையில் முதன் முறையாக சிவபூமி திறந்தவெளி அருங்காட்சியகத்தில் 21 மன்னர்களுக்கும் கடவுளருக்கு அடுத்த நிலையில் பீடங்கள் அமைத்து அவற்றின் மேல் மன்னர்களின் சிலைகள் வடிவமைக்கப்பட்டு அவற்றின் கீழ் ஆட்சியாண்டுகள் பொறிக்கப்பட்டுள்ளமை வரலாற்று ஆர்வலர்களுக்கு மன மகிழ்வை அளிப்பதாகவுள்ளது. கடந்த இருவாரங்களாக முகநூல்களில் பகிரப்பட்ட செய்திகளில் சிவபூமி அருங்காட்சியகம் பற்றிய செய்திகளே அதிக அளவில் ஆக்கிரமிப்புச் செய்தியாகக் காணப்படுகின்றன. இது தமிழ் மக்களின் நீண்டநாள் கனவு நிறைவேறியதன் பிரதிபலிப்பாகும்.

இதன் சாதனைக்கும் நன்றிக்கும் உரியவர் அரசியல் கலப்பற்ற சொல்லின் செல்வர் ஆறு.திருமுருகன். துடிப்புள்ள இளைஞராக ஆன்மீகப் பணியில் ஈடுபட்ட அவர் படிப்படியாக சமூகப் பணியில் அகலக் கால் பதித்து சாதனை படைத்து வரும் ஒருவர். பலர் சிந்திக்க முன்னரே செயலில் காட்டி பிறரைப் புதிதாகச் சிந்திக்கத் தூண்டியவர்.

இதற்கு தனிமனிதனாக இருந்து கிழக்கிலங்கை வரை இன்று வியாபித்துள்ள அநாதைச் சிறுவர்களுக்கான கல்விக் கூடம், விழிப்புணர்வற்றவர்களுக்கான காப்பகம், வயோதிபர் மடம், நாய்களுக்கான காப்பகம் முதலான அவரது பணிகள் கட்டியம் கூறி நிற்கின்றன. தூர நோக்குடன் நாவற்குழியில் அவர் உருவாக்கிய திருவாசக அரண்மனை இலங்கை வரும் ஆன்மீகவாதிகளையும், சுற்றுலாப் பயணிகளையும் யாழ்ப்பாணத்தை திரும்பிப் பார்க்க வைத்தது. இன்று அதற்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகம் தமிழர் பண்பாட்டை மேலும் தலை நிமிரச் செய்துள்ளது. இன்று யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் நாவற்குழி என அடையாளப்படுத்தப்படும் பெயர் விரைவில் யாழ்ப்பாண இராசதானியின் நுழைவாயில் என அழைக்கப்படுவதற்கு இவ் வருங்காட்சியம் வழி வகுக்கலாம்.

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
தலைவர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## உயிர் வாழப் பூமி

நாம் வாழும் புவியின் எதிர்காலம் சூரியனின் எதிர் காலத்தைச் சார்ந்துள்ளது எனலாம். அதாவது எதிர் காலத்தில் சூரியனில் ஏற்படும் மாற்றமானது எமது புவியின் இருப்பையே கேள்விக் குறியாக்கலாம். ஏனெனில் சூரியனின் உட்கருவில் சேர்ந்து வரும் ஹீலியம் (He) வாயுவினால், அதன் மொத்த ஒளிர்வுத்தன்மை (**solar luminosity**) மெல்ல மெல்ல அதிகரித்து வருகின்றது.

சூரியனின் இந்த ஒளிர் திறன் அடுத்த 1.1 பில்லியன் ஆண்டுகளில் (1.1 நூறு கோடி வருடங்கள் -**1.1 billion years**) 10 சத விகிதமும், அடுத்த 3.5 பில்லியன் ஆண்டுகளில் 40 சதவிகிதமும் அதிகரிக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. காலநிலைக் கணிப்பின்படி புவியை வந்தடையும் அதிக கதிர்வீச்சுக் காரணமாக கடல் வற்றுதல் போன்ற மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

புவியை வந்தடையும் அதிக கதிர்வீச்சுக் காரணமாக புவியின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பதால் அசேதன காபன் சுழற்சியை (**inorganic carbon cycle**) துரிதப்படுத்தி, அடுத்த 900 மில்லியன் வருடங்களில் தாவரங் களுக்கு அத்தியாவசியமான காபனீரொட்சைட் வாயு கரியமில வாயு ($CO_2$) வளிமண்டலத்தில் குறையும். தாவர ஒளிச் சேர்க்கைக்கு 10ppm (parts-per-million, $10^{-6}$) எனும் அளவில் காபனீரொட்சைட்வாயு தேவைப் படுகின்றது. தாவரங்கள் அழிவதால் அது வெளியிடும் ஒட்சிசன் (**Oxygen**) தடைப்படும். இதனால் மற்ற உயிரினங்கள் சில மில்லியன் ஆண்டுகளிலேயே முழுவதுமாக அழிந்துவிடும் சாத்தியப்பாடுகள் உருவாகும்.

சூரியன் அழிவில்லாத மற்றும் நிலையான ஒன்றாக இருந்தாலும், புவியில் ஏற்படும் குறைந்த எரிமலையாக்கத்தின் காரணமாக புவியின் உட்புற குளிர்ச்சியானது பெரும்பான்மையான வளிமண்டலத்தையும் கடற்பரப்பையும் குறைத்திருக்கக்கூடிய சாத்தியமுண்டு.


புவியின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பதால் அடுத்த நூறு கோடி வருடங்களில் புவியின் மேற்பரப்பில் உள்ள தண்ணீர் அனைத்தும் வற்றிவிடும். மேலும் புவியின் மேற்பரப்புச் சராசரி வெப்பநிலை **70°C** க்கு உயரும். இன்றைய கால கட்டத்திலிருந்து அடுத்த 500 மில்லியன் வருடங்களுக்கு புவி வாழ்வதற்கு ஏற்றதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்தபோதிலும் வளிமண்டலத்தில் உள்ள நைதரசன் நீக்கப்படுமானால் இது மேலும் 2.3 பில்லியன் ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படலாம்.


சூரியன் அதன் பரிணாம வளர்ச்சியில் இன்னும் 5 பில்லியன் வருடங்களில் ஒரு மாபெரும் சிவப்பு நட்சத்திரமாக (**red giant**) மாறும் என்றும் சூரியன் தற்போதைய விட்டத்தை போல அண்ணளவாக 250 மடங்கு விரிவடையும் என்று உருமாதிரிகள் கணிக்கின்றன. அதாவது சூரியனின் விட்டம் அண்ணளவாக **1 AU** ஆக அதிகரிக்கும். (**1 AU = 150 million km =93 million mile**)

இதன் காரணமாக புவியின் எதிர்காலம் எப்படியாகுமெனத் தெளிவாகத் தெரியவில்லை.

மாபெரும் சிவப்பு நட்சத்திரமாகிய சூரியன், தன்னுடைய அதிகபட்ச விட்டத்தை எட்டும் போது, சூரியன் தன் திணிவில் 30 வீதத்தை இழக்கும். அப்போது அலைகளினால் ஏற்படும் தாக்கம் இன்றியே, புவி சூரியனிலிருந்து **1.7 AU(250 ,000 ,000 km)** அளவு கொண்ட சுற்றுப்பாதைக்குத் தள்ளப்படலாம். அவ்வாறு தள்ளிப்போவதால், சூரியனின் வெளி மண்டலத்தின் தாக்கத்திலிருந்து புவி தன்னைக் காத்துக் கொள்ளும், ஆனால் சூரியனின் அதிகமாகும் ஒளிர்வுக் கதிர்களால், எல்லா உயிரினங்களும் அழிந்து போகும். எனினும், சமீபத்திய ஆராய்ச்சியின்படி அலைகளால் ஏற்படும் தாக்கத்தால், புவி அதன் சுற்றுப் பாதையிலிருந்து விலகி, மாபெரும் சிவப்பு நட்சத்திரமான சூரியனின் வளிமண்டலத்தில் நுழைந்து முழுவதுமாகக் கரைந்து போகலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.





புவி ஒரு திடமான கிரகமாகும். அதாவது முழுவதும் காற்றாலே ஆன மாபெரும் வாயுக்கிரகமான வியாழன் கிரகம் போலல்லாது கடினமான உடலால் ஆனது புவியாகும். புவியானது சூரியக் குடும்பத்திலுள்ள நான்கு திடக் கிரகங்களுள் உருவத்திலும் திணிவிலும் மிகப் பெரியது. இந்த நான்கு கிரகங்களுடன் ஒப்பிடுகையில், புவியானது அதிக அடர்த்தியானதும், மிகுந்த மேற் பரப்புப் புவியீர்ப்பு விசையைக் கொண்டதும், வலிமையான காந்தப் புலத்தினைக் கொண்டதும் மற்றும் வேகமான சுழற்சியைக் கொண்டதுமாகும்.



உட்கிரகங்களின் அளவு ஒப்பீடு (இடமிருந்து வலமாக)
புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய்

மேற்படி நான்கு திடக் கிரகங்களிலேயே புவியில் மட்டுமே டெக்டோனிக் தட்டுகளின் நகர்தல (**Shifting of Techtonic Plates**) காணப்படுகிறது.

புவியின் உருவம் துருவங்களில் தட்டையாகவும் நிலநடுக்கோட்டிற்கு அருகில் விரிவடைந்தும் உள்ள நீள்வட்ட கோளத்தைப் போல் காணப்படுகின்றது.


oblate

புவியின் சுழற்சியால் இந்த இடை விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும் விட்டங்களை ஒப்பிடுகையில் நிலநடுக்கோடு துருவங்களைவிட **43 km** அதிகமாயுள்ளது. இப்புவிக் கோளத்தின் சராசரி விட்டம் **12,742 km (7,918 மைல்)** அதாவது $\frac{40,000\ km}{\pi}$ ஏனென்றால் மீற்றரை முதலில் வரையறுக்கும் போது அது பூமத்திய ரேகையிலிருந்து வட துருவத்திற்கு பிரான்ஸில் உள்ள பாரிஸ் நகர வழியாக கணக்கிடும் தூரத்தில் $\frac{1}{10,000,000}$ க்கு ஈடாக கொள்ளப்பட்டது.




புவி அதன் இடவமைப்பான (**topography**) சிறு மேடு பள்ளங்களை வைத்து காணும் போது கோள வடிவிலிருந்து புவி மாறுபடும். ஆனால் மொத்தத்தில் இந்த வேறுபாடு மிகவும் சிறியது. உண்மையான கோளத்தோடு ஒப்பிடுகையில் புவி **0.17%** விலகியுள்ளது. இது பில்லியர்ட்ஸ் விளையாட்டில் பயன்படுத்தப்படும் பில்லியர்ட் பந்திற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய **0.22 %** மாற்றத்தை விட சிறியதேயாகும். புவியின் மேற்பரப்பில் மிக அதிகமாக கோள வடிவிலிருந்து விலகியுள்ள இரு இடங்கள் எவரஸ்ட் சிகரம் (கடல் மட்டத்திலிருந்து **8,848 m** உயரம்) மற்றும் மரியானாட்ரென்ச் (கடல் மட்டத்திலிருந்து **10, 911 m** கீழுள்ளது). புவி, நில நடுக்கோட்டருகே விரிந்திருப்பதால் பூமியின் நடுவிலிருந்து மிகவும் தள்ளி உள்ள இடம் நில நடுக் கோட்டருகே உள்ள ஈக் குவடோர் நாட்டின் (**Ecuador**) சிம்போராசோ சிகரமாகும்.

**அ.குகன்,**
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

**புதிர் 235 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**மதுரா அருந்தவம்**
**கோப்பாய் வீதி,**
**உரும்பிராய்.**

**புதிர் 235 க்கான சரியான விடை:**
புவியின் சராசரி ஆரை **Km** இல் யாது? **6371 km**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 236

இலங்கைத் தீவு அமைந்துள்ள வங்காள விரிகுடாவின் பரப்பளவு $km^2$ இல் எவ்வளவு?

**புதிர் 236 இற்கான விடைகளை 03.02.2020 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**அ.குகன், விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 236**

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

# சட்டவிரோதமாக மரங்களை வெட்டியவருக்கு 100 மரக்கன்றுகளை நாட்டுமாறு உத்தரவு பிறப்பித்த முல்லைத்தீவு மாவட்ட நீதவான்

(முறிகண்டி)


சட்டவிரோத மரம் மற்றும் அரச வளங்களுக்கு சேதம் விளைவித்த நபருக்கு அபராதத்துடன் 100 மரக் கன்றுகள் நடுமாறு முல்லைத்தீவு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக மரங்களை வெட்டிய குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் முல் லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கினை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீத வான் நீதிமன்ற நீதவான் மேற்குறித்த வாறு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மரக் கடத்தல்கள் தொடர்பில் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந் நிலையில் குறித்த சந்தேகத்தின் பேரில் கைதானவர் தனது குற்றத்தினை ஒப்புக் கொண்ட நிலையில் மேற்படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

வெட்டப்பட்ட மரம் மற்றும் சேத மாக்கப்பட்ட அரச சொத்துக்களுக்காக ரூபா ஒரு இலட்சத்து 96 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறும் வனவள பாதுகாப்புப் பிரிவின் அறிவுறுத்தலுக் கமைவாக 100 மரக் கன்றுளை நாட்டுமாறும் நீதவான் உத்தரவிட்டுள் ளார். (9-100)

# புலிகளின் ஆயுதங்களை தேடி ஆலய வளாகத்தில் அகழ்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பு பகுதியில் நேற்று பொலிஸாரால் அகழ்வு நட வடிக்கை ஒன்று முன்னெடு க்கப்பட்டது.

தமிழீழ விடுதலை புலி களால் புதைத்து வைக்கப் பட்டதாக சந்தேகிக்கப்படும் ஆயுதங்கள் மற்றும் தங்க த்தை தேடி புதுக்குடியிருப்பு நகரில் அமைந்துள்ள முத்து மாரி அம்மன் ஆலயத்துக்கு பின்புறமாக இந்த அகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையி னருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக பொலி ஸார், விசேட அதிரடிப்படை யினர், இராணுவத்தினர் இணைந்து இந்த அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட னர். மிக நீண்ட நேரமாக அகழ்வு நடவடிக்கை முன் னெடுக்கப்பட்ட போதிலும் எந்த பொருட்களும் மீட்கப் படவில்லை என்பது குறிப்பி டத்தக்கது. (9)

வன்னி வலம்

# மன்.தென்னை மரங்களில் செவ்வண்டின் தாக்கம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள தென்னை மரங்களில், செவ்வண்டின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அடம்பன் பகுதியில் உள்ள தென்னை மரங்களிலேயே செவ்வண்டின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக தென்னை அபிவிருத்தி சபை தெரிவித் துள்ளது.

இதனால் பயனாளிகள் தென்னைப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு, இத் தாக்கத்தை கட்டுப்படுத்துமாறும் சபை அறிவுறுத்தியுள்ளது. (9)

# கனரக வாகனம் குடைசாய்ந்து விபத்து



(நெளுக்குளம்)

வவுனியா தாண்டிக்குளத்தில் கால்நடை குறுக்கிட்டதனால் கனரக வாகனம் குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி நேற்று அதிகாலை கோழி தீவனத்தை ஏற்றி வந்த கனரக வாகனம் தாண்டிக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது திடீரென ஏ-9 வீதியை குறுக்கிட்ட கால்நடையால் கனரக வாகனம் குடைசாய்ந்து விபத்து இடம்பெற் றுள்ளது. வாகனத்தில் பயணித்த சாரதி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியிருந்ததுடன் கால்நடை ஒன்று உயிரிழந்திருந்தது. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசார ணையினை வவுனியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (9-299)

# முல்லைத்தீவில் சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் கௌரவிப்பு







(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

2019 ஆம் ஆண்டில் சிறந்த விவசாய, பழமர, பண்ணை உற்பத்திகளில் வினைத் திறனாகச் செயற்பட்டு சிறந்த இடங்களைப் பெற்ற முல்லைத்தீவு மாவட் டத்தின் விவசாயிகள், பண்ணையாளர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட் டனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரு மான சதாசிவம் கனகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விலங்கு விஞ்ஞான துறை சிரேஷ்ட விரிவு ரையாளர் திருமதி சின்னையா, முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிக ரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபைத் தவிசா ளர் பிரேமகாந்த், விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள், பண்ணையாளர் கள் கலந்துகொண்டனர். (9)

# குப்பை மேடு விவகாரம் தொடரும் போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா- மன்னார் வீதி புதிய சாளம்பைக்குளம் கிராமத்திற்கு அருகில் பாதுகாப்பற்ற முறையில் அமைக் கப்பட்டுள்ள, குப்பை மேட்டினை அகற்றும்படி நேற்று முன்தினம் பிரதேச மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் 2 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்திருந்தது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு தங்களுக்கு உரிய தீர்வினை பெற்று தரும் வரை குறித்த இடத்திலிருந்து விலகிச் செல்ல மாட்டோம் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இதனால் வவுனியா நகர சபைக்கு சொந்தமான கழிவகற்றும் வாகனங்கள் நேற்று நகரில் குப்பைகளை அகற்றாமல் உள்ளதுடன் நேற்று முன்தினம் அள்ளப்பட்ட குப்பைகள் வாகனங்களில் நகர சபையில் தரித்துள்ளது.

இதனால் நகர்ப்பகுதியில் குப்பைகள் தேங்கி காணப் படுகின்ற நிலையில் நேற்று நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பாக விவாதிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# குப்பை கிடங்கு இருக்கும் இடத்தில் மக்களை குடியேற்றியது தவறு

## வவு.தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா சாம்பைக்குளம் பகுதியில் குப்பைக் கிடங்கு இருப்பது தெரிந்தும் அதற்கு அருகில் வந்து வீட்டை கட்டுவது என்பது சரியான விடயம் இல்லை என வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவர் து.நடராஜசிங்கம் தெரிவித் துள்ளார்.

பம்பைமடு பகுதியில் குப்பை கொட்டுவதற்கு சாளம் பைக்குளம் பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றமை தொடர் பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த விடயம் பல்வேறு மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டங்களிலும் பேசப்பட்டது.

குப்பைக் கிடங்கு அங்கு இருக்கும் போதே மக்கள் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. அது ஒரு தவறான விடயம். அத்துடன் பிரதேச சபையினுடைய கட்டட அனுமதி இதுவரை பெறப்படவில்லை.

பல வருடங்களுக்கு முன்னரே இருந்த குப்பைக்கி டங்கிற்கு அருகில் வந்து வீட்டைக் கட்டுவது என்பது சரியான விடயம் இல்லை. அரசியல் பலமோ அல்லது அதிகார பலத்தை வைத்தே இங்கு குடியேற்றப்பட்டிருக்கி றார்கள்.

வவுனியாவில் சில பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பல வருடங்கள் கழித்தும் காணி உறுதிகள் வழங்கப்பட வில்லை. ஆனால் குறுகிய காலத்திற்குள் குடியேற்றப்பட்ட சாளம்பைக்குளம் மக்களுக்கு காணி உரிமம் வழங்கப்பட் டுள்ளது.

குறித்த குப்பைமேடு தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்தின் சூழலியலாளர்கள், மாவட்ட செயலாளர் என பல மட்டங்களில் கலந்துரையாடி திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும் என பல தடவைகள் பேசப்பட்டது. இதற்கு 200 மில்லியன் ரூபாய் பணத்தை ஒதுக்கி தருவதாக முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் தெரிவித்தி ருக்கிறார். எனினும் இதுவரை காலமும் அவ்வாறான ஒரு நிதி வழங்கப்படவில்லை.

குப்பை கொட்டும் இடத்தை மறிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். ஏனெனில் வவுனியாவை பொறுத்த வரை பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலை, வைத்தியசாலை, நகரம் உட்பட பல திணைக்களங்களின் கழிவுகள் அங்கு கொட்டப்படுகின்றன. இங்கு இருக்கும் 200 குடும்பங்கள் குப்பைகளைக் கொட்டுவதற்கு அனுமதிக்காது விடின் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மற்றும் திணைக்களங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தால் சட்ட நடவடிக்கைக்கு செல்ல வேண்டி ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரும் கலந்துரையாடியே இதற்கான தீர்வினை பெறமுடியுமே தவிர போராட்டம் மூலம் அல்ல என மேலும் தெரிவித்தார். (9-299)

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2020- 12.02.2020



விகாரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரை தொழில் ஸ்தானாதிபதி சந்திரன் பார்க்கிறார். எனவே இந்த மாதத்தில் உங்களுக்கு தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பொருளாதார நிலை உயரும். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் பதிவதால் கல்யாணக் கனவுகள் நனவாகும். கடமையில் இருந்த தொய்வு அகலும். 'இதுவரை வந்த வரன்கள் ஏதும் முடிவடையவில்லையே' என்ற ஆதங்கம் இனி மாறும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

தனாதிபதியான செவ்வாய் தனஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். எனவே தைரியமும் தன்னம்பிக்கையும் கூடுதலாகக் கிடைக்கும். தனவரவில் இருந்த தடைகள் அகலும். துணிந்து நீங்கள் எடுத்த முடிவால் தொழில் வளர்ச்சியைப் பெருக்கிக் கொள்வீர்கள். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பகையின் காரணமாக விலகிச் சென்ற சொந்தங்கள் இனி விரும்பி வந்து இணைவர். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம், பல மடங்கு விலை உயர்ந்து உங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். அதை விற்று அதில் வரும் இலாபத்தைக் கொண்டு வியாபாரத்திற்கு மூலதனமாக்கி தொழிலை விரிவு படுத்த முயற்சிப்பீர்கள்.

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்திற்கு அதிபதியான சூரியனும் 12 ஆம் இடத்திற்கு அதிபதியான புதனும் நான்காமிடத்தில் சேர்ந்து சஞ்சரிக்கிறார்கள். 'லாபாதிபதியும் விரயாதிபதியும் ஒன்றாக இணைந்து சஞ்சரிப்பதால் தொழிலில் வருகிற இலாபம் உடனடியாக விரயமாகி விடுமோ' என்று நினைக்க வேண்டாம். சுக ஸ்தானத்தில் அவை சேர்வதால் குடும்பத்தில் சந்தோச வாய்ப்புகள் உருவாக செலவிடும் சூழ்நிலையே அமையும். இல்லத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்க முன்வருவீர்கள். கல்யாண வயது வந்த பெண் பிள்ளைகள் வீட்டில் இருந்தால் கல்யாணச் சீர்வரிசைப் பொருட்கள், அவர்கள் அணியும் தங்க நகைகள் மற்றும் உபயோகிக்கும் வெள்ளிப் பாத்திரங்கள் போன்றவற்றை வாங்கும் வாய்ப்பு உருவாகும். 3 இல் சனி, கேது இருந்தாலும் குருவுடன் கூடியிருப்பதால் முன்னேற்றத்தில் எந்தத் தடையும் இருக்காது.

கும்ப புதன் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் புதன், ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். பஞ்சம ஸ்தானத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரனோடு இணைகிறார். எனவே புத-சுக்கிர யோகம் உருவாகி, பொருளாதார நிலையில் அதிக அளவு உயரப்போகிறீர்கள். பற்றாக்குறை இனி அகலும்.

## நல்ல காரியம் நடைபெறும் நேரம்

பணநடமாட்டம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு வியப்பார்கள். அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். எனவே தந்தைவழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். பெற்றோர்களின் ஒத்துழைப்போடு தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் சுக்கிரன், பெப்ரவரி 4 ஆம் திகதி மீன இராசியில் உச்சம் பெறுகிறார். எனவே இக்காலம் ஒரு இனிய காலமாக அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உன்னதமான நேரம் இது. 'வெளிநாடு சென்று பணிபுரியும் வாய்ப்பு வந்தும், அதை உபயோகப்படுத்திக்கொள்ள முடியவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது வரும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும் சூழல் ஏற்படும். உங்கள் திறமைக்கேற்ற வாய்ப்புகள் இப்பொழுது




கிடைக்கும். வீடு கட்ட வேண்டும், வாகனம் வாங்க வேண்டும் என்று கருதி சலுகைகள் கேட்டு அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தால் அது இப்பொழுது அனுகூலமாக இருக்கும். உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சுக்கிரன் விளங்குகிறார். அவர் 6 இல் சஞ்சரிக்கும்பொழுது 'விபரீத இராஜயோகம்' செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். வழக்குகள் சாதகமாக மாறும்.

தனுசு செவ்வாய் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், பெப்ரவரி 9 ஆம் திகதி சகாய ஸ்தானத்திற்கு செல்கிறார். தனாதிபதி, சகாய ஸ்தானத்திற்கு செல்வதால் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். குருவோடு செவ்வாய் இணைந்து குரு - மங்கள யோகத்தை உருவாக்குவதால் உடன் பிறப்புகளின் இல்லங்களில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறலாம். அல்லது உங்கள் உடன் பிறந்தவர்களுக்கு கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். முன்னோர்கள் செய்த கோவில் திருப்பணிகளை முறையாகச் செய்ய முன்வருவீர்கள்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது. வெள்ளிக்கிழமை அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான
சிறப்புப் பலன்கள்

இம்மாதம் தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். அதிர்ஷ்டத்தின் அளவு அதிகரிக்கும். அன்பு செலுத்தும் உறவினர்கள் அவ்வப்போது உதவி செய்வர். கணவன்-மனைவிக்குள் கனிவும் பாசமும் கூடும். ஒற்றுமை பலப்படும். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் படிப்படியாக மாறும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். பெற்றோர்களின் ஒத்துழைப்பு உண்டு. பிள்ளைகளுக்கு காலாகாலத்தில் கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் நல்ல சம்பவங்கள் பலவும் இம்மாதத்தில் நடைபெறலாம்.

சுக்கிரப் பெயர்ச்சிக்குப் பிறகு, பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். இம்மாதம் தைப்பூசத்தன்று முருகப்பெருமானை வழிபட்டால் முன்னேற்றத்தில் எந்தப் பாதிப்புகளும் ஏற்படாது.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். தனாதிபதி குருபகவான் தனஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். தொழில் ஸ்தானாதிபதி சூரியன், லாபாதிபதி புதனுடன் கூடி சகாய ஸ்தானத்தில் இருக்கிறார். எனவே பொருளாதார வளர்ச்சி மிகச்சிறப்பாக இருக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். உயர் பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பான மாதமாக அமையும்.

மாதத் தொடக்கத்திலேயே தனாதிபதி குருவோடு, சகாய ஸ்தானாதிபதி மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியான சனி இணைந்திருக்கிறார். குருவின் பார்வை சந்திரன் மீது பதிந்து குரு-சந்திர யோகத்தை உருவாக்குகிறது. எனவே உங்கள் திறமை பளிச்சிடும். திடீர் திருப்பங்கள் உண்டாகும். சென்ற மாதத்தில் எவையெல்லாம் நடைபெறவில்லை என்று நினைத்தீர்களோ அவை அனைத்தும் படிப்படியாக இப்பொழுது நடைபெறும். வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அனைத்தும் அகலும். மனதில் நினைத்தவை அனைத்தும் மறுகணமே நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

2 இல் கேதுவும் 8 இல் ராகுவும் இருக்கிறார்கள். மறைந்த ராகுவால் நிறைந்த பொருள் சேர்க்கை என்றாலும் கூட, வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால் கொஞ்சம் யோசித்துப் பேசுவது நல்லது. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம்தான். எனவே வாக்குக் கொடுக்கும் முன் ஒரு கணம் சிந்திப்பது நல்லது. பணியாளர்களால் தொல்லை, பக்கத்தில் இருப்பவர்களாலும் பிரச்சினை என்று வரும்பொழுது தைரியமும் தன்னம்பிக்கையும் அவசியம். மூளை பலமே உங்களுக்கு மூலபலம் என்பதால், நீங்கள் யோசித்துச் செய்யும் ஒவ்வொரு காரியங்களும் உங்களை வெற்றிப்படிக்கட்டில் ஏற வைக்கும். சுக்கிரபலம் நன்றாக இருப்பதால் ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அழகிய வாகனங்கள் வாங்கி, அதில் பயணிக்கும் வாய்ப்பும் உருவாகும். பொதுவாக புத-ஆதித்ய யோகம் உங்களுக்கு இருப்பதால் கல்வி வளர்ச்சி மற்றும் தொழில் முன்னேற்றம் கருதி நீங்கள் எடுத்த காரியங்கள் வெற்றிகரமாக முடியும்.

ராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்துகொள்வது நல்லது. இம்மாதம் தைப்பூசம் வருகிறது. அன்றைய தினம் தங்க ரதத்தில் பவனிவரும் முருகப்பெருமானை தரிசித்தால் மங்கல காரியங்கள் மனையில் நடைபெறும். தை அமாவாசை அன்று முன்னோர் வழிபாட்டையும் மேற்கொண்டால் முன்னேற்றத்தின் முதற்படிக்குச் செல்ல இயலும்.

## நினைத்தது நிறைவேறும் நேரம்

கும்ப புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். லாபாதிபதியாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் அவர், ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். எனவே இக்காலம் ஒரு பொற்காலமாகும். தடைகள் அனைத்தும் தானாக விலகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. "புதிய வீடு கட்ட வேண்டும் அல்லது கட்டிய வீட்டைப் பழுதுபார்க்க வேண்டும்" என்றெல்லாம் சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது அது செயற்படும் நேரமாகும். சொத்துக்களாலும் ஆதாயம் உண்டு. சொந்தங்களாலும் நன்மை உண்டு.

உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் கும்பத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 4 ஆம் திகதி மீன




இராசிக்குச் செல்கிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே கல்யாண முயற்சிகள் கைகூடலாம். கடல் தாண்டிச் செல்லும் வாய்ப்பும் உண்டு. பெண்களால் பெருமை சேரும். பெண் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பை முன்னிட்டுச் சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் சிரத்தை எடுப்பீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். பணியாளர் தொல்லை அகலும். உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகப்படுத்தும்.

தனுசு செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். பெப்ரவரி 9 ஆம் திகதி தன ஸ்தானம் எனப்படும் 2 ஆம் இடத்திற்கு வருகிறார். தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும் புகழும் கூடும். உடன் பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு. எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். அங்குள்ள குருவோடு செவ்வாய் இணைந்து, குரு-மங்கள யோகத்தை உருவாக்குவதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான
சிறப்புப் பலன்கள்

இம்மாதம் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வசதிகள் பெருகும். வருமானம் போதுமானதாக இருக்கும். இராசிநாதன் செவ்வாய் பலம் பெற்றிருப்பதால் ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகமாக வந்து கொண்டேயிருக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பாசமும் நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

குடும்ப ஸ்தானத்தில் குரு இருப்பதால் புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்ப்பீர்கள். நகை வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவு திருப்திகரமாக அமையும். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு எதிர்பார்த் தபடியே கிடைக்கலாம். குலதெய்வ வழிபா டும், தைப்பூசத்தன்று முருகப் பெருமான் வழிபாடும், தை அமாவாசையன்று முன்னோர் வழிபாடும் மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)



# பாரதம்

## காஷ்மீர் விவகாரத்தில் ட்ரம்ப் தலையிடுவதை அனுமதிக்க முடியாது- இந்தியா திட்டவட்டம்

(டில்லி)

காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாம் நாடு தலையிட அனுமதிக்க முடியாது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கு மீண்டும் இந்தியா திட்டவட்டமாக பதிலளித்தது.

ட்ரம்ப்பின் சமரச முயற்சி தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிலில், "காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாம் நாடு தலையிடக்கூடாது என்ற இந்தியாவின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது.



காஷ்மீர், இரு நாடுகள் இடையேயான பிரச்சினை. இதனை இருதரப்பு பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க முடியும். பேச்சுவார்த்தையும் பயங்கரவாதமும் ஒன்றாகிவிட முடியாது.

பயங்கரவாத ஆதரவை முதலில் பாகிஸ்தான் கைவிடட்டும். அதன் பின்னர் எந்தப் பேச்சுவார்த்தைக்கும் இந்தியா தயாராகவுள்ளது" எனத் தெரிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் டாவோசில் நடக்கும் உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் சந்தித்துப் பேசினார். இருவரும் காஷ்மீர் பிரச்சினை குறித்து பேசியதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

மேலும் காஷ்மீர் பிரச்சினையில் உதவ அமெரிக்கா தயாராக உள்ளதாகவும் இரு நாட்டுத் தலைவர்களும் விரும்பினால் தான் மத்தியஸ்தராக இருந்து பிரச்சினையைத் தீர்க்கத் தயாராகவுள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஏற்கனவே ட்ரம்ப்பின் சமரச முயற்சியை இந்தியா பலமுறை நிராகரித்தபோதும் மீண்டும் ட்ரம்ப் தமது விருப்பத்தை வெளியிட்ட நிலையிலேயே இதனை இந்தியா மீண்டும் நிராகரித்தது. (ஜ-2)

## மனித முகத்தையொத்த ஆடு; கடவுளாக வழிபடும் கிராம மக்கள்

(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தானில் மனித முகத்தை ஒத்திருக்கும் ஆடு ஒன்றை அம்மாநிலத்தின் கிராம மக்கள் கடவுளின் அவதாரம் எனக் கூறி வழிபட்டு வருகின்றனர்.

ராஜஸ்தான் மாநிலத்தின் நிமோடியா கிராமத்தைச் சேர்ந்தவர் முகேஷ்ஜி பிரஜபாப். இவருக்கு சொந்தமான ஆடு ஒன்று அண்மையில் குட்டிகளை ஈன்றது. அதில் ஒரு ஆட்டுக்குட்டி மனித உருவில் இருந்தது அப்பகுதியினரிடையே வியப்பை ஏற்படுத்தியது.



மனித முகத்தை ஒத்திருக்கும் இந்த ஆட்டுக்குட்டியை கடவுளின் அவதாரமாக வழிபடுவதாக அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து அறிவியலாளர்கள் கூறுகையில், 'இது 'சைக்ளோபியா' என்று அழைக்கப்படும் ஒரு அரிய பிறவி குறைபாட்டால் ஏற்படுகிறது. இதில் சாதாரண சூழ்நிலைகளில் முக சமச்சீரின்மையை உருவாக்கும் மரபணுக்கள் தோல்வியடைகின்றன.

பொதுவாக 16 ஆயிரம் விலங்குகளில் ஒரு விலங்கு இந்த குறைபாட்டுடன் பிறக்கிறது. மனிதர்களிலும் இந்தக் குறைபாடு மிக அரிதாகக் காணப்படுகிறது.

இதேபோல் கடந்த மாதம் ஆர்ஜென்டீனா நாட்டில் மனித முகத்தைப் போன்று உருவம் உடைய கன்றுக்குட்டி பிறந்தது. ஆனால் ஒருசில மணி நேரங்களில் அது இறந்தது' எனத் தெரிவித்தனர். (ஜ-2)

## சீனாவை ...
## திறந்த வெ...
## பாம்பிலி...

(பீஜிங்)

சீனாவில் தீவிரமாகப் பரவிவரும் புதிரான வைரஸான கொரோனா வைரஸ் எப்படி உருவாகியது என்பது குறித்து விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவலொன்றை வெளியிட்டனர்.

சீனாவில் இருந்து உலகம் முழுவதும் பரவும் கொடிய கொரோனா வைரஸ், வுவானில் திறந்தவெளி சந்தையில் விற்கப்படும் பாம்புகளிலிருந்து மனிதர்களுக்கு பரவி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள்

வி...

நம்புகி... வு... உண... உருவ... ருக்கல... உள்ள... கப்பட்டு... பல்... களைப்...

## மணிப்பூரில் சக்தி...



## கமரூனில் பாடசாலையிலிருந்து 24 குழந்தைகள் கடத்தல்

### பிரிவினைவாதிகள் அட்டூழியம்

(கமரூன்)

கமரூனில் பாடசாலையில் இருந்து 24 குழந்தைகளை பிரிவினைவாதிகள் கடத்திச் சென்ற சம்பவம் அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

ஆபிரிக்க நாடான கமரூனில் 2017 ஆம் ஆண்டு முதல் ஆயுதம் ஏந்திய பிரிவினைவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள் நாட்டின் வட மேற்கு மற்றும் தென்மேற்கு ஆங்கிலோபோன் பிராந்தியத்தை தனி நாடாக்க ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர்.

இந் நிலையில், ஆங்கில மொழி பேசக்கூடிய மெமே பிராந்தியத்தில், கும்பா நகரில் உள்ள பாடசாலைக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை பிரிவினைவாதிகள் நுழைந்தனர். அவர்கள் அங்கிருந்து 24 குழந்தைகளை கடத்திச்சென்று விட்டனர். இது அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

குழந்தைகளின் பெற்றோர் மிகுந்த வேதனைக்குள்ளாகினர். குழந்தைகளைப் பாதுகாப்பாக மீட்க வேண்டும் என்ற குரல் தீவிரமாக ஒலித்தது.

அதைத் தொடர்ந்து குழந்தைகளைப் பிரிவினைவாதிகள் கடத்திச்சென்று வைத்திருந்த காட்டுக்குள் இராணுவம் அதிரடியாக நுழைந்தது.

அப்போது குழந்தைகளை விடுவிக்க மறுத்த பிரிவினைவாதிகள், இராணுவத்தினர் மீது துப்பாக்கியால் சுட்டனர். உடனே இராணுவம் சரியான பதிலடி கொடுத்தது. இரு தரப்பினரிடையே நீண்டநேரம் துப்பாக்கிச்சமர் நடந்தது. முடிவில் 2 பிரிவினைவாதிகள் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து 24 குழந்தைகளையும் இராணுவ வீரர்கள் பாதுகாப்பாக மீட்டனர். அங்கிருந்து ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. மீட்கப்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அது நெகிழ்ச்சியானதாக அமைந்தது.


கமரூனில் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், வட மேற்கு மற்றும் தென்மேற்கு ஆங்கிலோபோன் பிராந்தியத்தில் ஆட்கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருவது மக்களிடையேகவலையை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-2)

## சிறுவன் மீது பாய்ந்து கழுத்தை து...

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் தனது பெற்றோருடன் மீன்பிடிக்கச் சென்ற ஒரு சிறுவன் மீது மீன் ஒன்று பாய்ந்ததால், அவர் கவலைக்கிடமாக உள்ளார்.

இந்தோனேசியாவைச் சேர்ந்தவர் முகமது இதுல் (வயது-16) என்ற அந்த சிறுவன் மீன் பிடிக்கச் சென்றார். அப்போது சிறுவன் மீது ஒரு மீன் பாய்ந்துள்ளது.




அந்த மீனின் வாய் ஊசிபோல் கூர்மையாக இருந்ததால் மீன் சிறுவனின் கழுத்தில் குத்தி மறுபக்கம் வந்தது.

இந்த மீன் மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் தண்ணீரிலிருந்து வெளியே பாயக்கூடியதுமாகும். அப்படி அந்த மீன் பாய்ந்தபோது, அதன் வாய் முகமதின் கழுத்தில் குத்தி, கழுத்தைத் துளைத்துக் கொண்டு மறுபக்கம் வெளியே வந்தது.

உடனே அவனை அவனது பெற்றோர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

வை... நிபு... பே... ன... இ... அ... மீ... அ... மு... அ... சிகி...

## ஆப்கான்- அமெரிக்க கூட்டுப்படை த... பத்து தலிபான் பயங்கரவாதிகள் உ...



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான் கூட்டுப் படையினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் 10 தலிபான் பயங் கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக அந்நாட்டு அரசு டன் இணைந்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை யினர் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனாலும், இந்த தாக்குதலில்



# வெளிநாடு



# வ அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் த வெளிச்சந்தையில் விற்கப்படும் லிருந்து பரவி இருக்கலாம்

## விஞ்ஞானிகள் தகவல்

நம்புகின்றனர்.

வுவான் நகரில் உள்ள கடல் உணவு சந்தை கொரோனா வைரஸ் உருவாகக் காரணமாக இருந்திருக்கலாம். தற்போது இந்தச் சந்தை உள்ளூர் அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஒட்டுண்ணி விலங்குகளைப் பாதிக்கும் விகாரங்களின் மரபணுக்களை அவர்கள் ஆராய்ந்தபோது, கொரோனா வைரஸ் பாம்புகள் எளிதில் பாதிக்கப்படுவதை பீக்கிங் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். பாம்புகள் பின்னர் மனிதர்களுக்கு தொற்று நோயைத் பரப்பும் வைரஸ் புள்ளியாக செயற்ப ட்டன.மத்திய வுவானில் உள்ள ஹுவானன் கடல் உணவு சந்தையில் கோலாக்கள், எலிகள் மற்றும் ஓநாய் குட்டிகள் விற்கப்படுகின்றன.



இதற்கிடையில் வைரஸ் மேலும் பரவுவதை தடுக்க வுவான் நகரில் உள்ள யாரும் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் எனவும், சீனாவின் மற்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வுவான் நகருக்கு வர வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மனிதர்களின் நுரையீரலை தாக்கி, மூச்சுத்திணறல் போன்ற நோய்களை உருவாக்கி, மரணத்தை ஏற்படுத்தக் கூடியது கொரோனா வைரஸ். இது ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு எளிதில் பரவும் தன்மை கொண்டது.சீனாவின் வுவான் நகரில் உருவாகியுள்ள இந்த வைரஸ், தற்போது சீனா மட்டுமின்றி அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கும் பரவி வருகிறது.கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு சீனாவில் இதுவரை சுமார் 17 பேர் உயிரிழந்தனர். 550 இறக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பிற்காக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (ஜ-2)

# சக்திவாய்ந்த குண்டு வெடிப்பு!



(மணிப்பூர்)

மணிப்பூர் தலைநகரான இம்பாலில் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

குறித்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை நாகமபால் ரிம்ஸ் சாலை அருகே இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக குறித்த பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழப்புகள் எதுவும் பதிவாக வில்லை என தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

குடியரசுத் தினத்தில் தாக்குதல்களை நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# துளைத்த மீன்

மயாக
த்தில்
மீற்றர்
ளியே
த மீன்
மதின்
ளத்துக்
தது.
ற்றோர்
றனர்.

வைத்தியர்கள், இரண்டு மயக்க மருந்து நிபுணர்களும் இரண்டு மணி நேரம் போராடி அந்த மீனை அகற்றினர்.கழுத்தில் மிக முக்கியமான இரத்தக்குழாய் ஒன்று செல்வதால் அதை சேதப்படுத்தி விடாமல் அந்த மீனை அகற்ற வேண்டியிருந்தது. மீன் அகற்றப்பட்டாலும், தொடர்ந்து முகமதுக்கு காய்ச்சல் இருப்பதாலும் அவர் வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்று வருகிறார்.(ஜ-2)

# கிரீஸ் நாட்டின் வரலாற்றில் முதன் முறையாக பெண் ஜனாதிபதி

(ஏதென்ஸ்)

கிரீஸ் நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக கதர்னி செகலாரோப்லூ அந் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

ஐரோப்பாவின் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள நாடு கிரீஸ் குடியரசு (கிரேக்கம்). ஜனநாயக நாடாக அங்கீகரிக்கப் பட்டு பல ஆண்டுகள் கடந்த பின்னரும் இதுவரை அந்நாட்டின் ஜனாதிபதியாக ஒரு பெண் கூட தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை.

இந்நிலையில், கிரீஸ் நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக கதர்னி செகலாரோப்லூ (வயது-63)



என்பவர் தெரிவு செய்யப்பட்டார். அந்நாட்டு நீதிமன்றத்தில் சிரேஷ்ட நீதிபதியாக உள்ள இவரை அந்நாட்டு பிரதமர் க்ரியாகோஷ் மிட்சோடகிசின் ஜனாதிபதி பதவிக்கு பரிந்துரை செய்தார்.

இதையடுத்து கதர்னியை கிரீஸ் ஜனாதிபதியாக தேர்ந்தெடுப்பது தொடர்பாக அந்நாட்டு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெற்றது. 300 எம்.பி.க்கள் அடங்கிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் உட்பட 261 எம்.பி.க்கள் கதர்னிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கிரீஸ் குடியரசின் முதல் பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கதர்னி செகலாரோப்லூ எதிர்வரும் மார்ச் 13 ஆம் திகதி அதிகாரபூர்வமாக பதவியேற்கவுள்ளார். (ஜ-2)

# டட தாக்குதல் ள் உயிரிழப்பு!

ம ரிக்கா
ப் படை
த் தாக்கு
வாதிகள்
டில் தலி
ஒடுக்கு
ரசு டன்
தலை
யினர்
ருகின்ற
க்குதலில்

அப்பாவி பொது மக்களும் கொல்லப்பட்டு வரு கின்றனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் ஷிண்டாநாத் மாவட்டத்தில் உள்ள ஹெராட் மாகாணத்தில் அமெரிக்க கூட்டுப்படை வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் 10 தலி பான் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும் 2 குழந்தைகள் உட்பட 5 பேர் படுகாயம் அடைந்தனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-2)

# சிரியாவில் வான்வழித் தாக்குதல்
# 6 குழந்தைகள் உட்பட 18 பேர் பலி

(டமாஸ்கஸ்)

சிரியாவில் வடமேற்குப் பகுதியில் ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் 6 குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ரஷ்யப் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தியதாகவும் இந்தத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்த நிலையில் இட்லிப் மாகாணத்தில் மற்றொரு தாக்குதலிலும் பொது மக்கள் உயிரிழந்ததாக சிரியா கண்காணிப்புக் குழு தெரிவித்தது.

உயிரிழந்த 18 பேரில், 6



குழந்தைகள் உட்பட 8 பேர் அடங்கிய குடும்பம் உயிரிழந்தது.

சிரியாவில் ஷியா பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கும் சன்னி பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ஜனாதிபதி ஆசாத்துக்கு ரஷ்யாவும் சன்னி பிரிவு கிளர்ச்சிப் படைகளுக்கு அமெரிக்கா மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகளும் ஆதரவளித்து வருகின்றன.

சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப் போர் காரணமாக சுமார் 50 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து இடம் பெயர்ந்துள்ளனர். மேலும் அரசு மற்றும் கிளர்ச்சிப் படைகள் மனித உரிமைகளை மீறி வரு வதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. (ஜ-2)

# வேலைவாய்ப்புக்கான விண்ணப்பப்படிவங்களை சகல பிரதேச செயலகங்களிலும் பெறலாம்

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் பிரதீபன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நாடு பூராக மேற்கொள்ளப்படும் ஒரு இலட்சம் பேருக்கான அரச வேலைவாய்ப்புக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல்கால வாக்குறுதியின் பிரகாரம் கிராமங்களில் வறுமை நிலையில் உள்ள இளைஞர்,யுவதிகளுக்கு பயிற்சியுடன் கூடிய அரச தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதாகக் குறித்த திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

எனவே யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் குறித்த வேலைவாய்ப்புக்கான விண்ணப்பபடிவங்களை அலுவலக நேரத்தில்பெற்றுக்கொள்ளலாம்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு பயனாளிகள் தெரிவு குறித்து அமைச்சர் யாப்பா விளக்கம்



(கொழும்பு)

வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தில், பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் விசேட குழுவின் மூலம் தொழில்வாய்ப்புக்களை பெறக்கூடியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று தகவல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்துக்கு அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பு தொடர்ந்தும் பாரிய அளவில் கிடைத்து வருகின்றது.

அரச அதிகாரிகள் தொடர்பில் நம்பிக்கை இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார். தகவல் தொழில்நுட்ப அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெவித்தார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் திட்டத்தை பலநோக்கு அபிவிருத்தி செயலணி முன்னெடுக்கும். அத்திணைக்களத்துக்கு விரைவில் பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து விசேட குழுவின் மூலம் தொழில்வாய்ப்புக்களை பெறக்கூடியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதற்கான குழு இவர்களின் தகைமை குறித்தும் கண்டறியும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

பிரதேச செயலாளர்களின் சிபாரிசுகளின் அடிப்படையில் பயனாளிகளுக்கான தொழில்வாய்ப்புக்கள் குறித்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். அரசாங்கம் பொது மக்களுக்கு மேற்கொள்ளும் சேவையை செயற்றிறன் மிக்கதாக முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் எந்தவித அரசியல் தலையீடுகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கியத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக வறுமை இல்லாத இலங்கையை உருவாக்குதல் என்ற குறிக்கோளை அடையும் நோக்கத்துடன் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்திலும் பார்க்க குறைந்த கல்வித் தரத்தைக் கொண்டவர்களுக்காக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திணைக்களத்தின் மூலம் தொழில்வாய்ப்பைப் பெறவுள்ளோருக்கு 6 மாத தொழில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களை அடுத்த மாதம் 2020.02.15 ஆம் திகதிக்கு முன்னர் பயனாளிகள் வாழும் பிரிவின் கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றிற்கு 22,500 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் தொழிற்றகைமைக்கு ஏற்ப தொழில்வாய்ப்பு வழங்கப்படும். விவசாய உற்பத்தி உதவியாளர் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை உதவியாளர் அடங்கலாக 25 சேவை பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரச்சினைகளை அனைவருடனும் இணைந்து கையாள வேண்டும்

## சித்தார்த்தன் எம்.பி. அறிவுரை



(சாவகச்சேரி)

ஏழாலை மத்தி சரஸ்வதி சனசமூக நிலையத்தினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

தமது சனசமூக நிலையம் மற்றும் அதனோடு இணைந்த விளையாட்டுக்கழகமும் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், வளப்பற்றாக்குறைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினருக்கு நிர்வாகத்தினரால் எடுத்துக் கூறப்பட்டது.

குறித்த விடயங்களை கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சனசமூக நிலைய பிரச்சினைகளை அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து கையாள வேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகள் உடனே ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளருமான பா.கஜதீபன், வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்சன் ஆகியோரும்கலந்துகொண்டனர். (ஜ-89)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எதிர்காலக் கவலைகள்!

ஒருத்தர் ரொம்பக் கவலையோட உட்கார்ந்திருந்தார். "எதைப் பற்றி சேர் கவலைப்படுகின்றீர்கள்?'' என்று கேட்டேன். ''எதிர் காலத்தைப் பற்றி கவலைப்படுகிறேன்!'' என்றார். "ஏன்?'' என்று கேட்டேன். "என்ன செய்வது என்று தெரியல சேர்... எதிர்காலம் ஒரே இருட்டாக இருக்கு... பாதையே புரியவில்லை என்றார்.

இன்றைக்கு நம்ம இளைஞர்கள் பலபேருக்கு எதிர்காலம் இருட்டாகத்தான் தெரிகிறது. அவர்கள் எல்லோரும் இந்தக் கதையைக் கொஞ்சம் கேட்க வேண்டும்.

ஒரு மலையடிவாரத்திலே ஒரு சின்ன கிராமம். அந்த மலை ரொம்ப உயரமானது. அடர்த்தியாக செடி, கொடிகள், மரங்கள் அதில் மண்டிக்கிடக்குது. பகல் வேளையிலே இருட்டாத்தான் இருக்கும். அவ்வளவு அடர்த்தி. அந்த மலை உச்சியிலேயே ஒரு கோயில். முதல் நாள் இரவு புறப்பட்டாத்தான் காலையில் அந்தக் கோயிலுக்குப் போய் சேர முடியும்.

கிராமத்து இளைஞன் ஒருத்தன் அந்த மலை உச்சிக்குப் போக வேண்டியிருந்தது. கையில் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு முதல் நாள் இரவு புறப்பட்டான். புறப்பட்டுப் போனவன் கிராமத்து எல்லையில் நின்றுவிட்டான் ஏன் தெரியுமா?

அவன் கையில் இருந்த விளக்கின் வெளிச்சம் போதாது. தூரத்துக்குத்தான் தெரிந்தது. அதுவரைக்கும்தான் பாதை தெளிவாக இருந்தது. அதுக்கு அப்பாலே எல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. பாதை புரியவில்லை!

இவன் யோசித்துப் பார்த்தான். மனசுக்குள்ளே ஒரு சந்தேகம். பத்தடி தூரம்தானே வெளிச்சம் தெரியுது. அப்படியென்றால் நாம பத்தடி தூரம் தானே போகமுடியும். அதுக்குமப்பால் ஒரே இருட்டாக இருக்கிறதே! அதிலே எப்படி நாம் நடந்து போவது? ரொம்ப தூரம் போக வேண்டுமே!

இதுதான் அவன் மனதிலே ஏற்பட்ட தயக்கம். இப்படி யோசித்துக்கொண்டே இந்த இளம் ஆசாமி புறப்பட்ட இடத்திலேயே நின்று கொண்டிருக்கிறான். அந்தச்சமயத்தில் ஒரு வயசான பெரியவர் அந்தப் பக்கமாக வந்தார். அவர் கையில் இதைவிடச் சின்னதாக ஒரு விளக்கு வைத்திருந்தார்.

அது ஒரு ஐந்தடி தூரத்துக்குத் தான் வெளிச்சம் காட்டும். அவ்வளவு சின்ன விளக்கு. இவரும் மலை உச்சிக்குப் போவதற்காகத் தான் வந்தார். அவரைப் பார்த்து இவன் கேட்டான். "என்ன பெரியவரே! இவ்வளவு சின்ன விளக்கை வைத்துக்கொண்டு அவ்வளவு தூரத்துக்கு எப்படி மலை ஏறப்போறீங்க?'' என்று கேட்டான்.

''நீ ஏன் இப்படி தயங்கிக்கொண்டே நிற்கின்றாய்?'' என்று கேட்டார் பெரியவர். ''என்கிட்டே இருக்கின்ற விளக்கு பத்தடி தூரத்துக்குத்தான் பாதையைக் காட்டுவது..! என்றான்.

"தம்பி உன் கையிலே இருக்கின்ற விளக்கு கொடுக்கின்ற வெளிச்சத்தை வைத்து நீ முதலில் பத்தடி தூரம் முன்னேறு! பத்தாவது அடியில் போய் நின்றுகொண்டு பார். மறுபடியும் ஒரு பத்தடி தூரத்துக்குப் பாதை தெரியும்!'' இப்படி உன் கையில் இருக்கிற விளக்கு தொடர்ந்து வெளிச்சம் காட்டிக்கொண்டு இருக்கும்.

நீ முன்னேற முன்னேற அந்த வெளிச்சமும் முன்னேறும். அதனாலே எத்தனை கிலோமீற்றர் தூரம் வேணும் என்றாலும் இந்த பத்தடி தூர வெளிச்சத்தை வைத்துக்கொண்டே போய் விடலாம் புறப்படு!'' என்றார். இப்பத்தான் அந்த பெரியவர் சொன்னது இளைஞனுக்கு பளிச்சென்று புரிந்தது. உடனே உற்சாகமாக புறப்பட்டான். உச்சிக்குப் போய்ச்சேர்ந்தான்.

இந்தக் கதையிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

நீண்ட காலத்திட்டம் ஒன்று போடும் போது... நமக்கு முன்னால் இருக்கின்றதை மறந்துவிட்டு மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. உங்கள் கையில் என்ன இருக்கோ அதிலேயே உங்கள் எதிர்காலம் மறைந்திருக்கு! கண் முன்னால் தெரிவதை வைத்து நடைபோட ஆரம்பியுங்கள்.. போகப் போக வழிதானாகப் புலப்படும் அப்படி என்றார் ஒரு பெரியவர். (ஓஷோ)

பெரிய பயணங்களையெல்லாம் இப்படித்தான் நடத்த வேண்டியிருக்கும். ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து ஓடிப்போய் சேர்ந்திடலாம். மலைச்சுப் போய் நின்றுகொண்டால் நின்று கொண்டே இருக்கவேண்டியது தான்.

நம்ம ஆள் ஒருத்தர் ரொம்ப மோசம் சேர். ஒருத்தன் அப்படித் தான் நீண்ட தூர பிரயாணம் ஒன்று புறப்பட்டான். ரயில் போய்க் கொண்டே இருந்தது. கொஞ்ச தூரம் போய் விட்டு பாதி வழியிலே கையில் வைத்திருந்த டிக்கெட்டை காற்றிலே விட்டு விட்டான்.

ஐயையோ என் டிக்கெட் போய்விட்டதே. டிக்கெட் போய்விட்டதே என்று கத்த ஆரம்பித்தான். பக்கத்தில் இருந்த பெரியவர் அவரைப் பார்த்துப் பரிதாபப்பட்டு ''கவலைப்படாதே தம்பி போனா போகட்டும் வேறே டிக்கெட் வாங்கிக்கலாம்..!'' என்று ஆறுதல் சொன்னார். அதுக்கு அவன் சொன்னான். "சேர் நான் அதுக் காக அழவில்லை அந்த டிக்கெட் கிடைச்சாதான் நான் எந்த ஊருக்குப் போகனும் என்பது எனக்குத் தெரியும்!'' என்றான்.






வரணி வடக்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் நடைபெற்றது.
(படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)

# கடற்றொழில், நன்னீர் வாழ்வாதார அபிவிருத்திக்கும் தீவகத்தின் குடிநீர்ப் பிரச்சினைக்கும் உதவுங்கள்

## கனேடிய உயர்ஸ்தானிகரிடம் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



(கொழும்பு)

கனேடிய அரசாங்கத்தால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் ஆழ்கடல் மற்றும் நன்னீர் மீன்பிடித் துறை சார்ந்தோரும் பயனடையும் வகையில் மேற்கொள்ளக் கூடிய செயற்றிடங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் டேவிட் மைக்ஹினொன்னிற்கும் இடையில் மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பின்போது, தற்போதைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாகவும், தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பான தன்னுடைய வழிமுறைகள் தொடர்பாகவும் அமைச்சரால் கனேடிய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அதனையடுத்து, இலங்கையின் கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடிச் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலவரங்களை எடுத்துக்கூறிய அமைச்சர், குறித்த துறைகளின் அபிவிருத்தி தொடர்பான தன்னுடைய திட்டங்களை தெரிவித்ததுடன் அதற்கு, கனேடிய அரசாங்கத்தின் உதவிகளையும் ஆலோசனைகளையும் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் வடமாகாணத்தின் தீவகப் பிரதேசத்தில் காணப்படும் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீரவைப் காண்பதற்கும் கனடா உதவவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார். அத்துடன், கனேடிய அரசாங்கத்தால் ஏற்கனவே இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமூக மற்றும் பெண்கள் மேம்பாட்டு திட்டத்திற்கும் குறிப்பாக வட பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளில் கனேடிய அரசாங்கத்தின் பங்களிப்பிற்கும் நன்றியை தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸின் எதிர்பார்ப்புக்களை கேட்டறிந்த கனேடிய உயர்ஸ்தானிகர், இலங்கையில் வருடந்தோறும் கனேடிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற "உள்ளூர் மக்களின் முன்னேற்றத்திற்கான கனேடிய நிதியுதவி "(**Canadian fund for Local intiative**) எனும் திட்டம் இம்முறையும் வழங்குவது தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் மாதங்களில் வெளியிடப்படவுள்ளதனால், மீனவர் அமைப்புக்களும் அதற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பித்து பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

அதனைவிட, இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் இணைந்து இலங்கையின் கடற்றொழில் மற்றும் நன்னீர் அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் தொடர்பாகவும் குறித்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில்

- எளியமுறை உடற்பயிற்சிகள் :
- காயகல்பப் பயிற்சி
- அடிப்படை தியானங்கள்

கற்றுத்தரப்படவிருக்கின்றன.

பயிற்சிகளை வழங்குவதற்கு **தமிழ்நாட்டின் தலைசிறந்த பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியை அருள்நிதி பானுமதி அவர்கள்** வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இவ் அரிய சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்தி பயன்பெறுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

காலம்: 25.01.2020 சனிக்கிழமை தொடக்கம் 31.01.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் :**மனவளக்கலை பேராசிரியை அருள்நிதி பானுமதி (M.A. Yoga)**
**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

அகத்தாய்வு 2ம் நிலை 25.01.2020 சனி மற்றும் 26.01.2020 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
தொ.இல:0212222772
(ச/-9048)


# இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்





(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் கடந்த 22 ஆம் திகதி இலவச கண் பரிசோதனை முகாம் மற்றும் கண்ணாடி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்றது.

இதில் உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்கு கொண்டு பயன்பெற்றனர். இந் நிகழ்விற்காக நிதி அனுசரணையினை பிரான்ஸ் நாட்டின் ஓம் சரவணபவ நிறுவனத்தின் விஸ்வ சாந்தி நிலையம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


**யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)**
**பதவி வெற்றிடம்**

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் 209/13 பதவி, சம்பள அளவுத்திட்டம் **16365-140 10-150 10-19265** இற்கு ஆட்சேர்ப்பு கோரப்பட்டுள்ளது.

**கல்வித் தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் தொடர்புபட்ட துறையிலான இரண்டு வருட கற்கைநெறி ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் அல்லது,

க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ள, 18-45 வயதுக்கு உட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண் ணப்பதாரிகளால் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தினை **செயலாளர், யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், 276, அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 06.02.2020 திகதி பி.ப 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்க வேண்டும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ளவர்கள் கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக தகவல்களை சங்க வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**தலைவர்,**
**யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல: 021 222 3218**

**276, அரசடிவீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
(1978)

# சர்வதேச கல்வி தினம் இன்று

கல்வியின் சிறப்பை அனைத்துச் சமூகங்களும் புரிந்துள்ளமையால் உலகில் இன்றியமையாததாக இன்று இருப்பது கல்வியே என்கிறார்கள் அனைவரும். இதனால் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசியத் தேவையாக மாறியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபையின் பொதுச்சபை 03.12.2018 அன்று சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் கல்வியின் பணிகள் என்பதனைக் கொண்டாடும் வேளை, ஜனவரி-24 இன்று உலக கல்விதினம் என புதிதாக பிரகடனப்படுத்தியது. பேண்தகு அபிவிருத்தியின் அனைத்து இலக்குகளையும் அடைந்து கொள்ள ஒத்துழைப்பு வழங்கு



வதற்குத் தேவையான அறிவு, திறனைப் பெற்றுக்கொள்வதற்கு அனைவருக்கும் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அவர்களது வாழ்நாள் முழுவதும் கிடைக்கவேண்டும் என்பது இதன் முக்கிய இலக்காகும். ஐ.நா. சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ நிறுவனம் அன்றிலிருந்து இதனை ஆண்டுதோறும் கொண்டாடிவருகிறது. கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று. கல்விக்கான மனித உரிமை, தனிப்பட்டவர்களுக்கும் சமூகங்களுக்குமான கல்வியின் பயன்கள், கல்விக்கும் மனித உரிமையின் மற்றும் பல அடைவுகளுக்கும் இடையில் உள்ள இணைப்பு என்பன இந்த அனுசரிப்பில் இனங்காணப்படுகின்றன. ஜெனிவாவின் நீதிக்கான சர்வதேச மையம்: கல்விக்கான நாள் ஏன் மிக முக்கியமானது மற்றும் மனித உரிமைகளில் கல்வியின் நிலை எவ்வாறு உள்ளது என மறுசீராய்வு செய்வதற்கு இந்த முதலாவதான உலக கல்வி நாளை எடுத்துக் கொண்டது.

### கல்வியின் பயன்கள்

கல்வியின்பால் இன்று பூகோளமயப்படுத்தல்கள் நடைபெறுகின்றன என்பதனை நோக்கும் போது பூகோள கவனத்தை நல்ல முறையில் ஈர்க்கும் அளவுக்கு வளர்ந்துவரும் கல்வியின் நேரான தாக்கங்கள் எண்ணிலடங்காதவை. கற்றவனுக்கு எந்நாடும்-ஊரும் தன்னுடைய ஊராகும். இதனையே திருவள்ளுவர் மிகவும் அழகாக கூறுகின்றார் யாதானும் நாடு ஆமால் ஊர் ஆமால் என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு என்று குறிப்பிடுகிறார். கல்வி தனிப்பட்ட அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி என்னும் இரண்டு நேர்த்தாக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. கல்வியால் கிடைக்கக் கூடிய குறிப்பிடத்தக்க நன்மைகள் சில:வறுமை ஒழிப்பு, சமத்துவம், உடல்நல நன்மைகள், சூற்றுச்சூழல் பயன்கள், உயர் வருமானமும் பொருளாதார வளர்ச்சியும்,வன்முறை-குற்றச் செயல்கள் குறைப்பு, சமாதானமும் சகோதரத்துவமும் ஊக்குவிக்கப்படல்,முரண்பாடுகளும் முட்டுக்கட்டைகளும் தவிர்க்கப்படல் போன்றனவாகும்.

அறிவியற்கல்வி, சமூக அறிவியற்கல்வி,அழகியல் கல்வி ஆகிய மூன்றும் வாழ்க்கைக்கு அவசியமானவை. ஒருவனு க்கு பெருமையையும் புகழையும் தரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமே அன்றி வேறில்லை. ஐ.நாவின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் அனைவரும் கல்வி பெறுவதற்கு உரிமையுண்டு. குறைந்தது தொடக்க அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமானதாக இருத்தல்வேண்டும். தொடக்கக் கல்வி கட்டாயப்படுத்தல் வேண்டும். தொழில்நுட்பக் கல்வியும் உயர் தொழிற்கல்வியும் பொதுவாகப் பெறப்படத்தக்கனவாயிருத்தல் வேண்டும். உயர்கல்வியானது யாவருக்கும் திறமையடிப்படையின் மீது சமமான முறையில் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும் என உறுப்புரை 26 இல் கூறப்படுகின்றது. ஆயினும் இன்று 265 மில்லியனுக்கு மேல் சிறுவர்களும் இளையவர்களும் வறுமை, பாரபட்சம், ஆயுதப் போராட்டம், அவசரகால நிலைமைகள், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களினால் பாடசாலைக்கு சென்று அங்கு கல்வியை முடிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருப்பது வேதனை கலந்த உண்மை.

பொருளாதார சமூகமற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை உறுப்புரை 13 இலும் கல்வி பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. சர்வதேச சிறுவர்கள் உரிமை சமவாயம் தனது உறுப்புரை 28-29 இல் கல்வி பற்றி சிறப்பாக கூறுகின்றது.

### கல்வியின் சிறப்பு

கல்வி சமுதாயம் வாழ்வதற்கான ஓர் அடிப்படை வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தது. சமூக நிலையை மேம்படுத்தும் ஒரு கருவி. கல்வியின் நோக்கங்கள் சமுதாயத் தேவைகளோடு தொடர்புடையதாக இருக்கின்றன. குழந்தைகளின் இயல்பான தேவைகள் மற்றும் நடவடிக்கைகள் சமுதாயத் தேவைகளோடு சார்ந்து நிற்பவை. குழந்தைகள் சமுதாயத்தின் இளம் அங்கத்தினர் ஆவர். ஆகவே கல்வியின் நோக்கங்கள் அக்குழந்தைகளின் சமுதாய மேம்பாட்டிற்கு உதவக்கூடிய வகையில் உருவாக்கப்பட வேண்டும். கல்வியின் நோக்கம் அறிவு-திறன்-மனப்பாங்கு மாற்றம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதே. எப்படி தம் மாணவர்களுக்கு பாடம் புகட்டவேண்டும், கல்வி அளிக்க வேண்டும் என்பது தான் ஒருநாட்டின் நோக்கமாக இருக்க வேண்டும். எப்படி மாணவர்களை வடிகட்டவேண்டும் என்பதாக இருக்கக்கூடாது என்கிறார் சுவீடனில் நனோ தொழில்நுட்பம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வரும் விஜய் அசோகன். ஒரு மாணவருக்கு என்ன சிறப்பாக வருகிறது, எதில் கவனம் செலுத்த வேண்டும் என்று ஆசிரியர் அறிந்து அதன்படி கல்வி வழங்கப்பட வேண்டும். "ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது. "காந்தியடிகள். கல்வி விரல்களைத் தான் வேலை வாங்குகிறதே தவிர மூளையையும் மனசையும் முழுமையாக்கவில்லை-கவிஞர் வைரமுத்து. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே", "தம் ஆசிரியருக்கு ஒருதுன்பம் வந்த போது உடன் சென்று அதனைத் தீர்ப்பதற்குத் துணைநிற்கவேண்டும். மிகுதியான பொருளை அவருக்குக் கொடுத்தாவது கல்வி கற்றல் வேண்டும்"-இலக்கியம். இந்த வரிகள் நோக்கும் போது பாடசாலை வாசலில் மோட்டர் சைக்கிளிலிருந்து கீழ் விழுந்த ஆசிரியையை உடனே தூக்க முன் வராத ஒரு பாடசாலையின் மாணவர்கள் பற்றிய சம்பவத்தைச் சுட்டிக்காட்டி "பாடப்புத்தகத்தை மட்டும் படிக்கின்ற இடமாகி விட்டதா பாடசாலைகள்" என்னும் ஆசிரியர் தலைப்பில் 09.01.2020 அன்று வலம்புரிப் பத்திரிகையில் வெளிவந்த சம்பவத்தை வாசிக்கையில் கண்கள் கடலாகி நிற்கின்றன.

### தத்துவஞானிகளின் கருத்து க்கள்

"கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர்"-தத்துவ ஞானி பிளேட்டோ மற்றும், "வாழ்க்கை அனுபவமில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது"-பெர்னார்ட்ஷா. "ஒருகுழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும்படி செய்வது கல்வியல்ல நல்லமனிதனாக இருக்கச் செய்வதே கல்வி"-ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், "இயற்கையாக மனிதனுக்குள் புதைந்திருக்கும் தெய்வீகமான பரிபூரணத்தை வெளிக்கொணர்வது கல்வி. உள்ளத்தின் விருப்பங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து பயனுள்ளதாக ஆக்குவதே கல்வி"-விவேகானந்தர். "குழந்தையின் உடல்,மனம்,ஆன்மா ஆகியவற்றை ஒரு சேர வளர்ப்பது கல்வி"-காந்தி. "மனிதனுக்குள் இருக்கும் அனைத்தையும் வளர்ச்சி அடையச்செய்து,அதன் வழியாக அவன்தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவும்,தன்னைப்பொருத்திக் கொள்ளவும் வகை செய்வதுகல்வி"-ஜான் டூயி போன்றோரின் கூற்றுக்கள் இவ்விடத்தில் நோக்க வேண்டியது கட்டாயமாகிறது.

கல்விகற்க வேண்டியதன் அவசியத்தை சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. கல்வியே உலகப் பொதுமறை என உலகோர் யாவராலும் போற்றி



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர் தொடர்பாடல்
ஊடகவியற்கற்கை ஆசிரியர்

வழங்கப்படுகின்ற திருக்குறளில் வள்ளுவப்பெருந்தகை யாவற்றையும் விட கல்வியைத் தான் செல்வம் என்று," கேடில் விழுச் செல்வங் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை" என ஒரு மனிதன் தன் வாழ்வில் பெற வேண்டிய செல்வங்களில் முதன்மையானசெல்வம் கல்வி என்கிறார். மேலும் பெற்றோர்களது கடமையாகவும் குறிப்பிடுகிறார். "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்"

அறியாமை என்னும் கொடு நோயை போக்கவல்லது கல்வி ஒன்றேயாகும். வள்ளுவர் அறிவுறுத்திய "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்கஅதற்குத் தக" என்று தொடங்கி கல்வி பற்றி பல சிறப்பான கருத்துக்கள் விழிப்புணர்வு செய்யப்படுகின்றன. மேலும் வெற்றிவேற்கை நூலானது" கற்கை நன்றேகற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே" என்று கல்வியின் தேவையை உணர்ந்து கூறுகிறது. ஒரு மனிதனுக்கு கல்வியே அழகு என நாலடியார் கூறுவதையும் நோக்குவோம்: "குஞ்சியழகும் கொடுந்தனை கோட்டழகும், மஞ்சளழகுமழகல்ல நெஞ்சத்து, நல்லம் யாமென்று நடுவுநிலையால், கல்வியழகேயழகு"

இவற்றை எல்லாம் நோக்கும்போது கல்வியின் தேவை பற்றியும் அதனால் ஒருவர் தன் வாழ்வில் என்ன எல்லாம் பெற்றுக் கொள்கின்றார் என்று சங்ககால நூல்களும் இக்கால நூல்களும் எடுத்துக் காட்டுகின்றன. கல்வி இருவழிச்செயல் கற்பிக்கும் ஆசிரியரின் ஆளுமை கற்போரது ஆளுமையில் மாற்றத்தை ஏற்படுத்தவல்லது. அறிவைப் பலவகையில் பயன்படுத்தக் கல்வி உதவிசெய்கிறது. ஆசிரியரின் நம்பிக்கைகள், மதிப்புகள் மற்றும் கருத்துகளால் குழந்தைகளிடம் மாற்றங்கள் ஏற்படும். ஆசிரியர் ஒருதத்துவ ஞானி. தன் தத்துவங்களின் வழியாகக் குழந்தையை விரும்பத்தக்க வகையில் மனிதனாக வளர்ச்சி பெறச் செய்கிறார். "ஒரு நாட்டின் கல்வி அமைப்புகள், அந்நாட்டை ஆள்கின்றவர்களின் சிறப்புக்களை வெளிப்படுத்தும்" என பிரௌன் கூறுகின்றார். மக்களாட்சி நாடுகளில் நல்ல குடிமக்களை உருவாக்குவதும், சுய கட்டுப்பாடு மற்றும் மக்களாட்சி பண்புகளை ஊட்டுவதும் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும்.

கல்வி ஒவ்வொரு தனிமனிதனையும், சமூகத்திற்கேற்ற திறமையானவர்களாக உருவாக்கவும், தனிப்பட்டவர்களின் திறமைகளையும், சக்திகளையும் உறுதியான முறையில் சமுதாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்- என்பார் ஜான் ஷரூயி. "கல்வி என்பது பிழைப்புக்கு வருவாய் தேடும் ஒரு வழிமுறை அல்லது செல்வம் ஈட்டும் ஒரு சாதனம் மட்டும் அன்று. அது மெய்யை தேடுவதற்கும் அற நெறியைப் பயில்வதற்கும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒருநெறிமுறை" -விஜயலட்சுமிபண்டிட.

இவ்வாறு பல தத்துவ அறிஞர்களும்,கல்வியாளர்களும், பலகாலங்களில்,பலநாடுகளில் மாறும் சூழலுக்கேற்ப கல்வியின் நோக்கங்களை உருவாக்கி யுள்ளனர்.

எது எவ்வாறாயினும் "பாடப் புத்தகத்தை மட்டும் படிக்கின்ற இடமாகிவிட்டதா பாடசாலைகள்" என்னும் ஆசிரியர் தலைப்பில் வெளி வந்த சம்பவங்கள் போல் கல்விக் கூடங்கள் மாணவர்களை உருவாக்கிவிடாது மனப்பாங்கு மாற்றத்தில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாய தேவையில் எமது பிரதே சம் உள்ளது என்பதை நாம் அனைவரும் உணர்து செயற்படுவோம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 90 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 300 | 250 | 300 |
| தக்காளி | 300 | 250 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 80 |
| கோவா | 150 | 150 | 160 | 130 | 200 |
| கரட் | 300 | 400 | 400 | 300 | 500 |
| பூசணி | 100 | 100 | 60 | 50 | 100 |
| புடோல் | 100 | 140 | 140 | 130 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 340 | 300-400 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 200 | 120 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 120 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 200 | 140 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 300 | 320 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 80 | 160 | 120 | 300 | 120 |
| கறிமிளகாய் | 250 | 340 | 280 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 800 | 1600 | 1000 | 600 | 800 |
| போஞ்சி | 180 | 240 | 220 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | 70 | 80 |
| கீரை-1பிடி | 50 | 40 | 30-40 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 35-50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 160 | 150 | 200 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 240 | 230 | 240 |
| முள்ளங்கி | 50 | 150 | 80 | 90 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | — | — | 120 | 100 |

# கரைச்சி பிரதேச சபையால் அறவிடப்படும் அதிகரித்த ஆதன வரிக்கு எதிர்ப்பு தெரிவித்து வர்த்தகர் ஒருவர் உண்ணாவிரத போராட்டம்

## கடைகளை மூடி ஏனைய வர்த்தகர்களும் ஆதரவு தெரிவிப்பு










(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் மக்களிடம் அதிகரித்த வீதத்தில் அறவிடப்பட்டு வருகின்ற ஆதனவரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வர்த்தகர் ஒருவர் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளார். இப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அதிகரித்த ஆதன வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கிளிநொச்சி நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு வர்த்தகர்களும் மேற்குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் கடந்த ஆண்டு இறுதியிலிருந்து ஆதனவரி அறவிடப்பட்டு வருகிறது. இந்த ஆதன வரியானது இலங்கையில் எங்குமில்லாத அளவுக்கு அதிகரித்த வீதமான பத்து-வீதமாக அறவிடப்பட்டு வருகிறது. இது கிளிநொச்சி போன்ற இலங்கையில் வறுமையில் முன்னிலை வகிக்கும் மாவட்டத்திற்கு பொருத்தமற்றது. யாழ்ப்பாணத்தில் கூட நான்கு. ஐந்து வீதங்களில் ஆதனவரி அறவிடப்படுகின்ற போது கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச சபையில் மட்டும் பத்து வீதம் அறவிடப்படுகிறது. இது போரினால் பாதிக்கப்பட்டு படிப்படியாக முன்னேறி வருகின்ற மக்கள் மீது சுமத்தப்படுகின்ற பெரும் சுமையாகும் எனத் தெரிவித்த வர்த்தகரான கு.மகேந்திரன். ஆதனவரியை நான்கு வீதமாக குறைக்குமாறு கோரி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தனது மக்கள் நலன்சார்ந்த இப் இப்போராட்டத்திற்கு வர்த்தகர்கள், பொதுஅமைப்புக்கள். அரசியல் தரப்பினர்களின் ஆதரவையும் கோரியிருந்தார்.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கிளிநொச்சி நகரில் உணவகங்கள், மருத்தகங்கள் தவிர ஏனைய வியாபார நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. இதன் போது போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கரைச்சி பிரதேச சபையே!

சுமத்தாதே! சுமத்தாதே! மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தாதே!, மீண்டெழும் கிளிநொச்சியை வரிச்சுமையால் நசுக்காதே!, நியாயமான வரியை அறவிடு. மக்களுக்கு சேவையினை வழங்கு!. மரத்தால் வீழ்ந்த மக்களை மாடு மிதித்த கதையாய், மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தாதே!. மக்களுக்கான சேவைகளை வழங்காது. வரிகளை மாத்திரம் அறவிடாதே!, கழிவுகளை அகற்ற முடியாத உனக்கு அதிகரித்த ஆதன வரி எதற்கு? இலங்கையில் எங்குமில்லாத அளவுக்கு. அதிகரித்த ஆதன வரியை அறவிடுவது நியாயமா? குண்டுகளால் தாக்கப்பட்ட கிளிநொச்சி மக்களை, வரியால் தாக்காதே! வரி மக்களின் நலனுக்காகவா, உனது வசதிக்காகவா அறவிடுகிறாய் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர்.

இப்போராட்டத்திற்கு வர்த்தக அமைப்புகள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டிருந்தனர். (9-100-312-271-350)

வன்னி வலம்

## வேலைவாய்ப்பு தொடர்பில் தவறான முறையில் விண்ணப்பப்படிவங்கள் விநியோகம்

(அக்கராயன்)

ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் தவறான முறையில் விநியோகிக்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாகவே உத்தியோகபூர்வமாக விநியோகிக்கப்படும்.

சில வியாபார நிலையங்களில் மக்களை ஏமாற்றும் வகையில் இணையத்தளங்களில் தன்னிச்சையாக விண்ணப்பப்படிவங்களை தரவிறக்கம் செய்து பொது மக்களிடம் விநியோகித்து விண்ணப்பப்படிவங்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வாறு நிரப்பப்படும் குறித்த விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். பொதுமக்கள் இதனை நம்பி ஏமாறவேண்டாம். ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களை நாடுங்கள்.

இணையத்தளங்களில் குறித்த வேலைவாய்ப்பு தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டாலும், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினாலேயே குறித்த விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னரே வேலைவாய்ப்பு தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும்.

எனவே வதந்திகளை நம்பி ஏமாற வேண்டாம் என மக்களிடம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் கேட்டுள்ளார். (9-350)

## வீதிவிளக்குகள் பொருத்தல்



(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் அனுசரணையுடன் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் சர்வதேச ஒன்றியத்தினரால் குமரபுரம் காஞ்சிபுரம் குஞ்சிபரந்தன் பகுதிகளில் நேற்று முன்தினம் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன.

குறித்த இந்த வீதி மின்விளக்கு பொருத்தும் நிகழ்வில் பரந்தன் வட்டார உறுப்பினர் திருமதி விக்டர் சாந்தி மற்றும் மின்சார சபை பொறியியலாளர் குகராஜா . தமிழரசுக் கட்சியின் பரந்தன் வட்டார செயற்பாட்டாளர் சந்திரபிரபா, பரந்தன் இளைஞர் வட்ட உறுப்பினர்கள். பரந்தன் பிரதேச இளைஞர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (9)

## மாணவர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் முன்னெடுப்பு

### வடக்கில் முதல்முறையாக கிளிநொச்சியில் ஆரம்பித்து வைப்பு





(முறிகண்டி)

பாடசாலை மாணவர்களின் குறைந்தபட்ச சேமிப்பிற்கான தானியங்கி பணம் சேமிப்பு இயந்திரம் வடக்கு-கிழக்கில் முதல்முதலாக கிளிநொச்சியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வு நேற்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஜெயந்தி தன பாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

மக்கள் வங்கியினால் பசுமை வங்கியியல் எனும் எண்ணக்கருவில் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 13 பாடசாலைகளில் குறித்த தானியங்கி வங்கி சேவை பொருத்தப்பட்டுள்ளது. 14 ஆவதாக குறித்த சேவை வடக்கு கிழக்கில் முதல்முதலாக கிளிநொச்சி மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட் ள்ளது.

குறித்த தானியங்கி இயந்திரத்தினை கிளிநொச்சி வலய கல்விப்பணிப்பாளர் மாணவர்களைக் கொண்டு திறந்து வைத்தார். தொடர்ந்து மாணவர்களால் வைப்பு செய்யப் பட்டது. இதன் போது வைப்பு செய்த மாணவர்களிற்கான பரிசுகளும் வங்கியாளர்களால் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த தானியங்கி சேவையின் ஊடாக ஒரு ரூபாய் முதல் பத்து ரூபாய் தாள் காசு தவிர்ந்த அனைத்து தாள்களும் வைப்பு செய்ய முடியும் என வங்கியாளர்கள்தெரிவித்தனர். (9-100-271)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் உ.உதயமோகன் தலைமையில் நடைபெறும். இதில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் கலந்து கொள்வார். (இ-5-105)

(யாழ்ப்பாணம்)

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் வை.விமலன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் (உடற்கல்வி) இ.சசிக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தமும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கி.பிரதீபா மற்றும் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் திருமதி பி.உமாச்சந்திராவும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-30)


# ஜயம்பதி இடத்திற்கு ரத்னபிரிய



(கொழும்பு)

கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்த நிலையில் அந்த வெற்றிடத்துக்கு சிவில் சமூக ஆர்வலர் சமன் ரத்னபிரிய நியமிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (இ-7)

# ஆலய மண்டபத்தில் பாம்பு



(கரணவாய்)

நாகர்கோவில் பூர்வீக நாக தம்பிரான் ஆலயத்தில் நாக பாம்பு ஒன்று படமெடுத்து ஆடியது.

நேற்று வியாழக்கிழமை வழமைபோன்று ஆலயத்தில் பூசை மேற்கொள்வதற்காக பூசகர் சென்றபோது ஆலய மண்டபத்தில் நாகபாம்பு ஒன்று படமெடுத்து ஆடிய வண்ணம் இருந்தது. (இ-60)

# குரல் பதிவுகளே மோசடி!

(கொழும்பு)

குரல்பதிவுகள் குறித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் ஏற்புடையதாக இல்லை என தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க இக்குரல் பதிவுகளின் மூலம் மோசடிகள் தொடர்பில் கண்டறிவதற்கு முன்னர் குரல் பதிவுகளே மோசடிகளை கொண்டிருப்பதாக கூறினார்.

பொலிஸார் அவரது வீட்டை சோதனையிட்டு அவரைக் கைது செய்ததன் காரணமாகவே இன்று குரல் பதிவுகள் வெளியில் வந்துள்ளன. இல்லையென்றால் இந்த குரல் பதிவுகள் தொடர்பில் ஒருவருக்கும் எதுவும் தெரியாமல் போயிருக்கும். அப்படியென்றால் ஏன் இவர் அவ்வாறு குரல் பதிவுகளை பதிவு செய்து வைத்திருந்துள்ளார் என்பதே மிக முக்கிய கேள்வியாகும்.

இந்த விடயம் தொடர்பில் ரஞ்சன் விளக்கமளிக்க வேண்டும். இதில் வேறு ஏதாவது சூழ்ச்சியும் இருக்கக் கூடும். அத்தோடு, நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளே இன்று அவர்களின் தோல்விக்கு காரணமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வினாவிடைப் போட்டி பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 2019 ஆம் ஆண்டு வினாவிடைப் போட்டி பரிசளிப்பு விழா இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மகாஜனன் ஆர்.செல்வஸ்காந்தன் தலைமையில் இடம் பெறும். இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், சிறப்பு விருந்தினராக கல்லூரி அதிபர் ம.மணி சேகரம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-105)

# புதுமை மாதா ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் பரிசுத்த புதுமை மாதா ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 5.45 மணி திருப்பலியைத் தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணியளவில் திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முதல் திருப்பலி அதிகாலை 5 மணிக்கும் இடம் பெறவுள்ளதுடன் திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணித் திருப்பலி யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும். திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து மெழுகுவர்த்தி மந்திரித்தலும் திருச்சொரூபப் பவனியும் இடம் பெறவுள்ளன. (ஜ-2-106)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: அவிட்டம் 1சூரி செவ் 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/ 7019 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 13 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: GAQ<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/7104 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 19 ½ செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, London<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/ 7025 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 42 ¾ உயரம்: 5'<br>தகைமை/தொழில் A/L, தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/ 7105 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: A/L, தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/ 7027 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 18 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும். விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/ 7107 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி, London<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/ 7036 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தரதொழில்<br>தொ.இ: G/7109 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA.

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| 1 | Timber works for MRI & CT Scan Room and Aluminium Partition Door for Hospital Library | 500.00 | 20,000.00 | 91 | 1.0 | C9 |


2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 27.01.2020 up to 11.02.2020 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 12.02.2020, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

(C-9045)

Director (Chairman),
Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.




# சொந்த அறிவு



ஓர் ஊரில் நல்லவன் ஒருவன் இருந்தான். அவன் எல்லாருக்கும் உதவி செய்யும் இயல்புள்ளவன்.

ஒருநாள், கடைத் தெருவில் பார்வையற்ற ஒருவன் வழி தெரியாமல் தடுமாறுவதைக் கண்டு, அவனை தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். சில நாட்கள் தன் வீட்டில் தங்கிவிட்டுப் போகுமாறு அன்புடன் அவனை வேண்டினான். பார்வையற்ற யாசகன் அதற்கு சம்மதித்தான். சில நாட்கள் சென்றன. யாசகனுக்குத் தொடர்ந்து அப்படி தங்குவதற்குச் சங்கடமாயிருந்தது. தான் கிளம்புவதாகக் கூறினான்.

"இன்னும் சிறிது நாள் தங்கிச் செல்லலாமே!" என்றான் அந்த நல்லவன்.

"இல்லை ஐயா! நானோ வறியவன். என் பிழைப்புக்கான வழியையும் நான் பார்க்க வேண்டும். நெடுங்காலம் இந்த இடத்தில் தங்குவதால், உங்களுக்கும் என்னால் வீண் சுமை. எனக்கும் வீண் சோம்பல் வந்துவிடும்.

யாராயிருந்தாலும் பிழைப்புக்காக அவரவருக்குத் தெரிந்ததைச் செய்ய வேண்டுமே தவிர, பிறர் மீது சவாரி செய்யக் கூடாது"

இதைக் கேட்ட நல்லவன் மகிழ்ந்தான். யாசகனின் தத்துவப் பேச்சு அவனை மிகவும் புளகாங்கிதமடையச் செய்தது.

"சரி! இப்போது இருட்டிவிட்டது. அதனால், இன்று இரவு மட்டும் இங்கே தங்கிவிட்டு, நாளைக் காலையில் புறப்பட்டுப் போ!" என்றான். யாசகன் இதைக் கேட்டு வெறுமையாகச் சிரித்தான்.

"நானோ யாசகன். பிறவியிலேயே என் பார்வையை இழந்தவன். அப்படியிருக்க, இரவுக்கும் பகலுக்கும் எனக்கு என்ன வேறுபாடு தெரியப் போகிறது?" என்றான். யாசகனின் தெளிவைக் கண்டு வியந்த நல்லவன்,

"சரி! இந்த விளக்கையாவது வழித் துணைக்கு எடுத்துக் கொண்டு போ!" என்று வேண்டினான்.

"கண் தெரியாதவனுக்கு விளக்கினால் என்ன பயன்?" என்று மறுத்தான் யாசகன்.

"உண்மை. ஆனால், விளக்கு உனக்கு உபயோகப்படாவிட்டாலும் இதனால், உன் எதிரே வருபவர்களுக்கு நீ வருவது தெரியுமல்லவா?" என்று கூறி, விடாப்பிடியாக ஒரு விளக்கை அவனிடம் கொடுத்தனுப்பினான் நல்லவன்.

அதற்கு மேல் மறுக்காமல் விளக்கைக் கையில் ஏந்திக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் சென்ற பின், எதிரே வந்த ஒருவன், மடேலென்று யாசகன் மீது மோதிக் கொண்டான்.

"யாரவன்! கண் மண் தெரியாமல் வந்து மோதுவது?" என்று யாசகன் கத்தினான்.

"மன்னிக்க வேண்டும். நான் நேராகத்தான் வந்தேன். தாங்கள் தான் என் மீது வந்து மோதினீர்கள்!" என்றான் அந்த ஆள்.

"சரி! எனக்குத்தான் கண் தெரியாது. உங்களுக்குமா? தெரியாது?" சீறினான் யாசகன்.

"நள்ளிரவு என்பது அனைவருக்குமே பொதுவானதுதானே நண்பரே! இரவு நேர இருட்டில் எனக்கு மட்டும் எப்படி வெளிச்சம் தெரியும்?" என்றான் வந்தவன்.

"அது சரிதான். ஆனால், என் கையில் உள்ள விளக்குக் கூடவா உங்கள் கண்களுக்குத் தென்படவில்லை?" என்றான் யாசகன் இன்னும் காட்டமாக.

"உண்மைதான். தாங்கள் விளக்கை ஏந்தியிருக்கிறீர்கள். ஆனால், அது அணைந்து அல்லவா போயிருக்கிறது!" என்றான்.

"தவறு என்னுடையது தான். அவரவரும் தன் சுய அறிவைத்தான் பயன்படுத்த வேண்டும். இரவல் ஞானத்தால் எந்தப் பயனும் இல்லை!" என்றபடியே விளக்கைத் தூக்கியெறிந்துவிட்டு, தன் கைக்கோலை ஊன்றிய படியே நடந்தான்.

இப்போது அவனால் சிரமமின்றி நடக்க முடிந்தது. ஆயிரம் பேர் ஆயிரம் சொன்னாலும் அவரவர் சொந்தப் புத்தியை உபயோகிப்பது நல்லது.

# விடுகதைகளும் விடைகளும்

• ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?

மூச்சு

• கறுப்பு நிறமுடையவன், கபடம் அதிகம் கொண்டவன், கூவி அழைத்தால் வந்திடுவான், கூட்டம் சேர்த்தும் வந்திடுவான். அவன் யார்?

காகம்

• இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதன் அல்ல. அது என்ன?

துவிச்சக்கரவண்டி

• இலையுண்டு கிளையில்லை, பூ உண்டு மணமில்லை, காய் உண்டு விதையில்லை, பட்டை உண்டு கட்டை இல்லை, கன்று உண்டு பசு இல்லை அது என்ன?

வாழை

• எப்போதும் மழையில் நனைவான், ஆனால் ஜுரம் வராது. எப்போதும் வெயிலில் காய்வான். ஆனால் ஏதும் ஆகாது. அவன் யார்?

குடை

# பழமொழிகள்

• தவளை தன் வாயாற் கெடும்.

• தவிட்டுக்கு வந்த கை தங்கத்துக்கும் வரும்.

• தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு.

• தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை.

• தெய்வம் வரங் கொடுத்தாலும் பூசாரி விடாதது போல்.

• நடந்தால் நாடெல்லாம் உறவு . படுத்தால் பாயும் பகை.

• நட்டுவன் பிள்ளைக்குக் கொட்டிக் காட்ட வேண்டுமா !

• நண்டு கொழுத்தால் வளையில் இராது. தண்டு கொழுத்தால் தரையில் இராது.

• நமன் அறியாத உயிரும் நாரை அறியாத குளமும் உண்டோ?

• நயத்திலாகிறது பயத்திலாகாது.


• நரிக்கு கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்.

• நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நல்ல பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை.


• நல்லது செய்து நடுவழியே போனால், பொல்லாதது போகிற வழியே போகிறது.

• நல்ல வேளையில் நாழிப்பால் கறவாதது கன்று செத்துக் கலப்பால் கறக்குமா

## சரியான வழி காட்டுங்கள்...



## உருக்களின் நிழல்களை தொடர்புபடுத்துக



# தை அமாவாசையும் அபிராமிப்பட்டரும்



உலக வழக்கில் ஒருவரின் ஆலோசனையின் அடிப்படையில் ஒரு செயலை மேற்கொண்டால் அச்செயலால் வரும் நன்மைகளை அந்த ஆலோசகருக்கு உரித்தாக்கமாட்டோம். நானே செய்தேன் என இறுமாப்படைவோம். துன்பம் வந்தால் அவரைத் தூற்றுவோம். ஆனால் அபிராமிப் பட்டரோ தை அமாவாசையன்று அன்னையின் அருளில் மூழ்கியிருந்தார். சரபோஜி மன்னனிடம் இன்று பூரணை நிலவு வரும் என்று கூறுகின்றார். தான் செய்த செயலின் விளைவாக துன்பம் தன்னை நோக்கி வரும் என்று தெளிவாகத் தெரிகிறது. தெரிந்தே தவறு செய்கிறார். அதன் விளைவு வரப்போகும் துன்பத்தை கண்டு அஞ்சி முன்பாக இறைவியிடத்து என்னை காக்க வேண்டும் என முறையிடுகிறார். உண்மையில் அபிராமிப்பட்டர் எந்தத் தவறும் செய்யவில்லை. நாம் செய்த நல்ல செயலை எல்லோரும் புகழ்வர், பாராட்டுவர். அதன் பயனை அனுபவிப்பர். ஆனால் தீய விளைவை யார் செய்தார்களோ அவர்கள் மட்டுமே அனுபவிக்க வேண்டும். ஒருவர் செய்யாத குற்றத்திற்காக தண்டனையை அன்பின் காரணமாக பிறர் பகிர்ந்து கொள்ள முடியாது. கடவுள் மட்டுமே அத்தருணத்தில் காப்பாற்றவோ துன்பத்தை தீர்க்கவோ நல்லருள் செய்ய முடியும். எனவே அபிராமிப்பட்டர் இறைவியிடம் பூரண சரணாகதி அடைந்து தன்னை காக்கும்படி வேண்டுகின்றார். இதன் போது கிடைத்ததுதான் அரும்பெரும் பொக்கிஷமான அபிராமி அந்தாதி.

''இழைக்கும் வினை வழியே அடும் காலம் எனை நடுங்க

அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்

குழைக்கும் களபக் குவி முலை யாமளக் கோமளமே

உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே"

ஒருவரின் பாவ புண்ணியத்தின் கணக்கை வைத்தே காலன் நம்மை அணுகுவான் என்பதை பட்டர் ''இழைக்கும் வினை வழியே அடும்காலன்'' என்ற வரிகளால் குறிப்பிடுகின்றார்.

"எனை நடுங்க அழைக்கும் பொழுது" யமனானவன் உடலை விட்டு உயிரைப் பிரிக்க வரும்போது மிகக் கொடிய நடுங்கத்தக்க ஐந்து செயலை செய்வான் என்பது சாத்திரம்.

வியாதி, அறிவு குழப்பம், அச்சம், தயக்கம், மறதி இந்த ஐந்தையும் எமதூதர்கள் இந்த அறிகுறிகளையே ''நடுங்க அழைக்கும் பொழுது'' என்ற வரியால் குறிப்பிடுகின்றார். அந்த நேரத்திலும் மனிதனுக்கு இறப்பச்சம் வருவதில்லை என்பதனால் தனக்கு வந்த அச்சத்தை இங்கே நினைவூட்டுகின்றார். கீழே நெருப்பும் மேலே உறியும் அதன் மேல் அவர் அமர்ந்து பாடுகின்றார். உறியிலிருந்து ஒவ்வொரு கயிறாக அறுக்கப்படுகின்றது. உமையவள் காட்சி கொடுத்து அன்றிருந்த அமாவாசையை பௌர்ணமி ஆக்கவில்லையேல் தான் நெருப்பில் வீழ்ந்து மாய்வது உறுதி. 100 கயிற்றில் 32 கயிறுகள் அறுக்கப்பட்ட நிலையில் நிலவு வராமையால் அவருக்கு இறப்பச்சம் சூழ்ந்து கொள்கிறது.

சக்தி உபாசகர்கள் பல்வேறு உமையம்மையின் ரூப தியானத்தை மறைமுகமாக சூட்டி விளக்கியுள்ளார். இவ்வாறு நான்கு கையுடன் அபய வரத முத்திரை தாங்கிய சக்தியே அபிராமியாவார். வானத்தில் தோட்டை கழற்றி எறிந்து நிலவைக்காட்டி பட்டரை காத்த அன்னையவளின் திருவடியைச் சேவித்து எமது பெற்றோர்களை, முன்னோர்களை நினைத்து சிரார்த்தம் செய்து அவர்களுடைய ஆசியைப் பெற்று ஆன்ம ஈடேற்றம் காண்போமாக.

-சிவனடியான்-

## மனித வளத்தை வினைத்திறனாக முதலிட்ட

# யாழ். தொழில் நிலையத்திற்கு தங்க விருது



(கொழும்பு)

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற லக்ரெக்கிய ஹரசர தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திணைக்களத்தின் பிரதான இலக்கான மனிதவளத்தை வினைத்திறன் வாய்ந்ததாக முதலிடும் வகையில் செயலாற்றிய தொழில் நிலையங்களுக்கான தரப்படுத்தலில் யாழ்ப்பாணம் மாவட்ட தொழில் நிலையம் முதலாம் இடத்தைப் பெற்று தங்கவிருதைப் வென்றுள்ளமையை முன்னிட்டு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் அண்மையில் கௌரவிப்பு நிகழ்வு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

தேசிய ரீதியில் மாவட்ட ரீதியாக கடமையாற்றும் அனைத்து மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் கடமைகளின் அளவு, பொறுப்புக்கள், ஆளிடைத்தொடர்புகள், தலைமைத்துவம் உட்பட தொழில்களின் செயலாற்றல்கள் மற்றும் அவற்றின் பலன்களாகிய சேவைகளின் அளவுகள் போன்றவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையிலேயே இவ் விருதிற்கான மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

பத்தரமுல்லையில் கடந்த 23.12.2019 ஆம் திகதி நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் திறன்கள் அபிவிருத்தி வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் டினேஷ் குணவர்த்தனவால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட தொழில் நிலையம் தங்க விருதையும் குருநாகல், மட்டக்களப்பு மாவட்ட தொழில் நிலையங்கள் முறையே வெள்ளி, வெண்கல விருதுகளைப் பெற்றுக் கொண்டன. (இ-9-10)



அல்வாய் கலையகத்தில் அண்மையில் நடைபெற்ற அலை கலை இலக்கிய வட்டத்தின் 57 ஆவது ஒன்றுகூடல் நிகழ்வில் வணபிதா.ஜே.எஸ்.ஜோசுவா "சமகால ஈழத்துப் படைப்பிலக்கியங்களில் பேசப்படாத எதிர்வுகூறல்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். இதில் ஜீவநதியின் 13 ஆவது ஆண்டு மலர் வெளியீடும் இடம்பெற்றது.





சம்பத் வங்கி சங்கானை கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளைப் பேணி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பதக்கமும் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சங்கானைக் கிளையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய முகாமையாளர் த.அரவிந்தன் கலந்து சிறப்பித்தார்.

உன் மனச்சாட்சியே, உலகத்தைப் பார்க்கிற வெரியதும் உண்மையானதுமான நீதிபதி.

– மெக்கலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அவர்களை அப்படிக் கேட்க உங்களுக்கு வெட்கமில்லையா?

தமிழர் தாயகத்திலும் தமிழுக்கு முன்னுரிமை வழங்குவதைத் தடுத்து சிங்களத்தை முதன்மைப்படுத்திய அமைச்சர் வீரவன்சவின் செயல் பேரினவாதத்தின் உச்சம் எனலாம்.

தவிர, விமல் வீரவன்ச போன்ற ஈனர்களால் இந்த நாட்டில் மரண ஓலத்தைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாதென்பது நிரூபணமாயிற்று.

இது ஒருபுறமிருக்க, அமைச்சர் விமல் வீரவன்சவின் செயல் கண்டு கண்டனம் தெரிவிக்காத தமிழ் அமைச்சர்களைப் பார்த்து உங்களுக்கு வெட்கம் இல்லையா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் வைத்துக் கேட்டுள்ளார்.

இவ்வாறு கேட்பதற்கு உங்களுக்கு வெட்கமில்லையா என்பதுதான் தமிழ் மக்கள் அவரிடம் கேட்கும் கேள்வி.

ஆம், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை ஆதரித்து அவர்களைக் காப்பாற்றிய நீங்கள் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாத ரணிலின் அரசாங்கத்தைக் கண்டித்தீர்களா?

மன்னாரில் திருக்கேதீச்சரத்து ஆலய நுழைவாயில் வளைவைத் தள்ளிவிழுத்தி காலால் மிதித்து வெறியாட்டம் ஆடியவர்களை நீங்கள் கண்டித்தீர்களா?

முல்லைத்தீவு செம்மலையில் பௌத்த விகாரையை அமைத்தபோது ஏய்! ரணில் விக்கிரமசிங்கவே எங்கள் ஆதரவில் இருந்து கொண்டு செம்மலையில் என்ன செய்கிறாய் என்று உங்களால் கேட்க முடிந்ததா?

அல்லது முல்லைத்தீவு விகாராதிபதியின் உடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் தகனம் செய்தபோது – நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்காமல் பொலிஸாரும் பௌத்த பிக்குகளும் செயற்பட்டபோது, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் இப்படி நடக்கிறது. இது கண்டிக்கப்பட வேண்டும். இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலின் அரசாங்கத்தை ஆதரிக்காது என உங்களால் கூற முடிந்ததா?

அவ்வாறு கூறமுடியாமல் உங்களைத் தடுத்ததன் பின்னணியில் இருந்தது என்ன என்பதெல்லாம் மறந்தாயிற்றா?

அல்லது இரகசியமாகச் சென்று ஆட்சித் தரப்புடன் ஆலோசனை நடத்தியபோது காணாமல்போனவர்களின் நிலை என்ன என்று அங்கு கேட்டீர்களா?

இவற்றையெல்லாம் கேட்க முடியாத உங்களுக்கு வெட்கம் இல்லை என்ற போது, தமிழ் அமைச்சர்களைப் பார்த்து உங்களுக்கு வெட்கம் இல்லையா என்று நீங்கள் கேட்பதைப் பார்க்கும்போது இவற்றைக் கேட்க உங்களுக்கு வெட்கமில்லையா? என்பதுதான் தமிழ் மக்களின் கேள்வி.

தமிழ் மக்கள் உங்களை நம்பி வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பி வைக்க, நீங்கள் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை ஆதரித்து தமிழினத்தை நடுத்தெருவில் விட்டு விட்டு,

இப்போது தமிழ் அமைச்சர்களைப் பார்த்து உங்களுக்கு வெட்கமில்லையா என்று கேட்கிறீர்கள் என்றால் உங்களை விட்ட நயவஞ்சகம் யாரிடமும் இருக்க முடியாது என்பதுதான் உண்மை.

# ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள் இனி தபால் மூலம் வாக்களிக்கலாம்

### தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில், தபால் மூல வாக்களிப்பு சட்டம் உள்ளிட்ட தேர்தல் சட்டங்கள் சிலவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆரம்பப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில் முதற்கட்டமாக ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள் அடங்கலாக அத்தியாவசிய பணிகளில் ஈடுபடுவோருக்கும் வசதியான முறையில் வாக்களிக்கக் கூடிய புதிய முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்பொழுது தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெறாத அல்லது அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் நபர்களுக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கு அல்லது ஏனைய பொருத்தமான மாற்று நடவடிக்கை தொடர்பிலும் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்; 18 வயதை பூர்த்தி செய்தவர்களுக்கு வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கல் மற்றும் தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான திருத்தங்களுக்குமான சட்ட திருத்தம் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும், இத்திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே நோக்கமாகும் என்றும் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ம-3)

பாதுகாப்பு அமைச்சு

# ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றபோதே, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதை அவர் உறுதிப்படுத்தினார். (ம-3)

# கொங்கிறீட் வீடுகளை பார்வையிட யாழ்,கிளிநொச்சி அரச அதிகாரிகள் பதுளை பயணம்

(யாழ்ப்பாணம்)

பதுளையில் அமைக்கப்பட்ட கொங்கிறீட் வீடுகளைப் பார்வையிட யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் பொறியலாளர்கள் நேற்றைய தினம் பதுளைக்குச் சென்றனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அமைக்கப்படவுள்ள கொங்கிறீட் வீட்டுத் திட்டங்களுக்கு முன்னோடியாக குறித்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளைப் பார்வையிடச் சென்றுள்ளனர். (ம-3,10)

# ஆணின் சடலம் மீட்பு; பெண் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் எழுதுமட்டுவாழ் பகுதியில் ஆணின் சடலம் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்ணை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் கஜநிதிபாலன் நேற்று உத்தரவிட்டார்.

கொடிகாமம் எழுதுமட்டுவாழ் படித்த மகளிர் திட்டப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை கத்திக் குத்துக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தில் பெண்ணொருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்திய போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-10-60-114)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** சுழிபுரம், பத்தானை கேணியடி, மாவடி, மூளாய், K.M.K. Sea Foods (PVT) ltd, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, மாவைகலட்டி, கீரிமலை கடற்படை முகாம், Solid Wastage Disposal Keerimalai ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத்வத்த கிராமம், பறயனாளங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரைக்கும், மனிக்பாம் I,II,III மற்றும் IV ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyrah house, தலைமன்னார் வைத்தியசாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house,கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate I and II ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

செயலை விதையுங்கள். பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள். குணம் உண்டாகும். குணத்தை விதையுங்கள். உங்கள் எதிர்காலம் உண்டாகும்.

-போர்டு ஏமன்

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

இந்து தர்மத்தின் பரிபூரண விளக்கத்தை அறிய அருள்நந்தி சிவாச்சாரியார் எழுதிய "சிவஞானசித்தியார்" என்ற நூலும் உமாபதி சிவம் எழுதிய "சிவப்பிரகாசம்" என்ற நூலும் படிக்கத்தக்கவை. அவைகளில் எல்லா விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அஹிம்சையின் இரைச்சல்

சிறப்பாக நாம் அன்பு, கருணை, எல்லோரும் நம்மைச் சேர்ந்தவர்கள் எனும் உணர்வு போன்ற மனிதப் பண்புகள் வளர உதவியாகவும் தெளிவாகவும் ஊக்கம் தருதல் தேவை.

நீங்கள் வாழும் பகுதியில்- பல குழுக்களுடன் பேசவும் தினசரி செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மூலமாக மக்களை அணுகவும் எத்தனை கூடுமோ அத்தனை குழந்தைகளுக்கான பயிற்சி வகுப்பு- ஆர்ட் எக்ஸல் (Art Excel), ஆர்ட் ஒப் லிவிங் (Art Of Living- பெரியோருக்கான வாழும் கலைப்பயிற்சி) பயிற்சிகள் நடக்க ஏற்பாடு செய்யவும்.

**டேவிட்:** மக்கள் கோபப்படுவதற்கு வெட்கப்பட்டால் அது அவர்களை இயற்கைக்கு மாறாக வைக்காதா? அவர்களுக்குள் எதிர்த்து நிற்கும் தன்மையை நிறுவுமல்லவா, அத்தன்மை தொடர்ந்து இருக்குமல்லவா?

**ஸ்ரீஸ்ரீ:** அவர்கள் வெட்கப்படாவிட்டால் அவர்கள் கோபப்படவும் வன்முறையில் இறங்கவும் உரிமைப் பட்டயம் (அனுமதி- License) பெற்றதாக உணர்வர். வியாதியையும் கெட்ட பழக்கவழக்கங்களையும் எதிர்க்க எதிர்ப்புச் சக்தி தேவை போன்று சில சமயங்களில் எதிர்த்து நிற்றலும் நல்லதே.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# 16 வகை லட்சுமிகள்

**ஸ்ரீசௌபாக்யலட்சுமி:-** ஸ்ரீதேவி எங்கும் எதிலும் மகிழ்ச்சி உருவில் இருக்கின்றாள். நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு மற்றவர்களின் மகிழ்ச்சிக்கும் காரணமாக இருக்க வேண்டும். பிறர் மனது நோகாமல் நடந்தால் ஸ்ரீசௌபாக்கிய லட்சுமியின் அருளைப் பெற்று மகிழலாம்.

**ஸ்ரீசந்தானலட்சுமி:-** எல்லா குழந்தைகளையும் தன் குழந்தையாக பாவிக்கும் தாய்மை உணர்வு எல்லோருக்கும் வேண்டும். தாயன்புடன் ஸ்ரீசந்தான லட்சுமியை துதித்தால் நிச்சயம் பலன் உண்டு.

**ஸ்ரீகாருண்யலட்சுமி:-** எல்லா உயிர்களிடமும் கருணையோடு பழக வேண்டும், உயிர் வதை கூடாது. உயிர்களை அழிக்க நமக்கு உரிமை இல்லை. ஜீவ காருண்ய ஒழுக்கத்தை கடை பிடித்தால் ஸ்ரீகாருண்ய லட்சுமியின் அருளைப் பெறலாம்.

**ஸ்ரீமகாலட்சுமி:-** நாம் நம்மால் முடிந்ததை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றுமே நம் உள்ளத்தில் உதவ வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருந்தால் நமக்கு ஒரு குறையும் வராது. மேலும் ஸ்ரீமகாலட்சுமி நம்மை பிறருக்கு கொடுத்து உதவும் படியாக நிறைந்த செல்வங்களை வழங்குவாள்.

(தொடரும்)

# மன்னார் டைமன்ஸ்ரார் உதைபந்தாட்டம்

# சென்.ஜோசப் முத்தரிப்புத்துறை சம்பியன்





நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட "டைமன்ஸ்ரார்" விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த மூன்று தினங்களாக நானாட்டான் பிரதேச பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

சுமார் 40 அணிகள் பங்குபற்றிய உதைபந்தாட்ட போட்டியில் சென்.ஜோசப் முத்தரிப்புத்துறை அணியும் சென்.சேவியர் தேவன்பிட்டி ஆகிய இரு அணிகளும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இறுதிப் போட்டியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமானது.

குறித்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம், நானாட்டான் பிரதேச செயலக பிரதேச செயலாளர் நானாட்டான் பங்குத்தந்தை டைமண்ட் ஸ்டார் விளையாட்டு கழக வீரர்கள் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

போட்டியில் இரண்டு அணிகளுக்கிடையில் விறுவிறுப்பான ஆட்டம் நடைபெற்றது.

இரண்டு அணிகளும் கோல்கள் எதனையும் போடாத நிலையில் தண்ட உதை வழங்கப்பட்டது.

இதன்போது 4: 3 என்ற கோல் கணக்கில் சென்.ஜோசப் முத்தரிப்புத்துறை அணி வெற்றி பெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கான கேடயங்களும் பணப்பரிசில்களும் சிறப்பு விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன. (க-285)

# குத்துச்சண்டை வீரர்களுக்கு சீருடை வழங்கல்



வவுனியா குத்துச்சண்டை வீரர்களுக்கு ஒஸ்ரியா போட்டோ நிறுவனத்தினால் சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாண ஏழாம் அறிவு தற்காப்பு கலைசங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஒஸ்ரியா நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.சிவஜீவனின் பணிப்புரைக்கமைவாக ஒஸ்ரியா நிறுவனத்தினால் குத்துச்சண்டை வீரர்களுக்கான சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தை பிரதிபலித்து வவுனியாவிலிருந்து ஏழு குத்துச்சண்டை வீரர்கள் சர்வதேச கிக்பொக்சிங் போட்டிக்கு பாகிஸ்தான் செல்லவுள்ள நிலையில் அவர்கள் உட்பட ஏழாம் அறிவு தற்காப்பு கலை அமைப்பின் 25 வீர, வீராங்கனைகளுக்கு ஒஸ்ரியா நிறுவனத்தின் முகாமையாளரால் சீருடைகள் வழங்கி வைக்க, வடக்கு மாகாண ஏழாம் அறிவு தற்காப்பு கலை சங்கத்தின் தலைவரும், வடக்கு மாகாண கிக் பொக்சிங் பயிற்றுவிப்பாளருமான எஸ்.நந்தகுமார் சீருடைகளைப் பெற்றுக் கொண்டார். (க-250)



**சர்வதேச குத்துச்சண்டை போட்டிக்கு பாகிஸ்தான் செல்லும் வீரர்களுக்கு வவுனியாவில் விசேட ஆராதனை நிகழ்வு நடத்தப்பட்டது. வவுனியாவைச் சேர்ந்த எஸ்.சஞ்சயன், ரி.நாகராஜா, பி.ராகுல், வி.வசீகரன், எஸ்.சிறிதர்சன் மற்றும் ஆர்.கெ.கேவின் ஆகியோர் கடந்த 22 ஆம் திகதி கிக் பொக்சிங் குத்துச்சண்டை போட்டிக்கு பாகிஸ்தான் சென்றனர். அவர்களுக்கு வவுனியா, மன்னார் வீதியில் அமைந்துள்ள நாற்சதுர சுவிசேச சபையில் இறை ஆசி வேண்டி விசேட ஆராதனை நிகழ்வு நடைபெற்றது. (க-250)**





**பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் 2019 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் குமுதெனி அல்வாய் விக்கிரமன் விளையாட்டுக்கழகத்தின் நுழைவாயில் அங்கஜன் இராமநாதனால் கடந்த 7 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. (க)**

## தென்பகுதியைச்...

தென்பகுதியிலிருந்து வருகைதந்து கொக்கிளாய் பகுதியில் தங்கியிருந்து வாடியொன்றில் உதவியாளராக செயற்பட்டுவந்த மீனவர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த வில்லுக்குளத்தில் உருக்குலைந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இந்த சடலத்தை கண்ட சக மீனவர் கிராம அலுவலரிடம் முறையிட்ட நிலையில் கொக்கிளாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு விசேட தடயவியல் பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி ரதிநாதன் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு தோணி மூலம் கரைக்கு கொண்டுவரப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது .

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் யாஎல பகுதியை சேர்ந்த 63 வயதான மொகஸ்டீன் கிறிஸ்தோபர் என்பவராவார். (ம-3)

## எதிர்வரும் நாட்...

ரையாடல் நேற்று வவுனியாவில் இடம்பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்.

அரசியல் கைதிகளாக இருக்கின்றவர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி நாம் பேச்சுக்களில் ஈடுபட இருக்கின்றோம்.

யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்களாகியும் தொடர்ந்து சிறைகளில் வாடிக் கொண்டு இருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும். அவர்களிற்கு ஒரு பொதுமன்னிப்பை வழங்கி அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் போராளிகள் சார்பாக முன்வைக்கவுள்ளோம்.

இதேவேளை போராளிகள் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பாக விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த தலைமைத்துவ சபைக்குள் ஜனநாயக போராளிகள் கட்சியும் இருக்கின்றது. போராளிகளின் கைகளில் அரசியல் அதிகாரம் வரும் வரை முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களிற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தமிழ்த் தலைமைகள் உதாசீனமாக செயற்படுவது தொடரத்தான் போகின்றது.

ஆகவே எதிர்வருகின்ற காலத்தில் போராளிகளின் ஜனநாயக வெற்றி முன்னாள் போராளிகள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கு சிறந்ததொரு சந்தர்ப்பமாக அமையும்.

அண்மையில் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட ஒரு இலட்சம் வேலைவாய்ப்பிற்குள் முன்னாள் போராளிகள் அதிகளவில் உள்வாங்கக் கூடிய சந்தர்ப்பம் இருப்பதாக நாம் கருதுகின்றோம்.

இதற்கும்பால் மாற்று அரசியல் தலைமை என்பது பெயரளவில் இல்லாமல் சிறந்த கொள்கைகளோடு செயற்பட வேண்டும். தற்போது மாற்றுத் தலைமைகள் என பேசிக் கொண்டு இருப்பவர்கள் கடந்த காலங்களிலே ஜனநாயக அரசியலிலே தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் கைகளிலே அதிகாரங்கள் வழங்கப்பட்டு அந்த காலங்களிலே செய்ய முடியாத நிலை இருந்தது.

தற்போது அவர்கள் மீளவும் ஒரு மாற்றுத்தலைமையை கொடுக்கப்போகின்றோம் என்பது உண்மையிலேயே நகைப்புக்கிடமான ஒரு விடயமாகும் என தெரிவித்தார். (ம-3,299)

## பளையில் பெரு...

நேற்று முன்தினம் குறித்த பகுதியில் புனர்நிர்மாண வேலைகளுக்காக அத்திபாரம் வெட்டிய பொழுது புதைக்கப்பட்ட நிலையில் பெருந்தொகையான வெடி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து பொலிஸார் நீதிமன்ற உத்தரவினை பெற்று விசேட அதிரடிப்படையின் உதவியுடன் நேற்றைய தினம் வெடிபொருட்களை மீட்டுள்ளனர்.

மிதிவெடிகள், ஷெல் உட்பட பெருந் தொகையான் வெடிபொருட்கள் மற்றும் இயந்திரக் கருவிகள் மீட்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டன. (ம-3,9,316)

## சகோதரர்...

சகோதரர் ரிப்கான் பதியுதீன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி காணி உறுதிப்பத்திரங்களைக் கொண்டு மன்னாரில் காணிகளை அபகரித்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது. எதிர்வரும் 6ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-3)

## கைது நடவடிக்...

ணத்திற்காகவும் அல்லது வெளி நோக்கங்களுக்காகவும் எவரும் கைது செய்யப்படக் கூடாதெனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

எவரேனும் ஒரு நபரை கைது செய்யும் நடவடிக்கை இடம்பெற வேண்டியது குறித்த பொறுப்பை நிறைவேற்றும் அதிகாரியின் தொழில்சார் தீர்ப்பின் அடிப்படையிலாகும் என்றும் அக்கடமை சுயாதீனமாகவும் எவ்வித பயமுறுத்தல் அல்லது அனுசரணைகளுமின்றி இடம்பெறுவதை உறுதிசெய்து கொள்ளுமாறும் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்துமாறு ஜனாதிபதி ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தரவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

"கைது நடவடிக்கைகள் தண்டனையின் ஒரு பகுதியல்ல என்பதுடன், அது கைது செய்யப்படும் நபரின் நற்பெயருக்கும் சமூக அந்தஸ்திற்கும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடாகும். இதனால் பொலிஸார் மிகுந்த கவனத்தோடும் சட்டதிட்டங்களை முழுமையாக பேணியும் நடவடிக்கை எடுக்க வேண்டும்." என ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். (ம-3)

# ஒரு கிலோ நெல்லினை 50 ரூபாயுக்கு கொள்வனவு செய்ய அமைச்சரவை நேற்று அனுமதி

(கொழும்பு)

பெரும்போகத்தில் ஒரு கிலோகிராம் நெல்லை 50 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் சமல் ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக் கமைய அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

இதனடிப்படையில், ஈரலிப்பான நெல் ஒரு கிலோகிராமின் விலை 45 ரூபாயாகும்.

அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்யும் வேலைத்திட்டத்தை மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபையின் மூலம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பெரும்போக நெல் அறுவடை தற்போது இடம்பெற்று வருவதுடன், இம்முறை மூன்று மில்லியன் மெட்ரிக்தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுகின்றது.

கொள்கை ரீதியாக வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படமையினால், விலை அதிகரித்தாலும் அதனூடாக 100 மில்லியன் டொலர் அந்நியச்செலாவணி மீதமாகியதாக அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ அமைச்சரவையில் யோசனையை முன்வைத்திருந்தாலும் ஈரப்பதமான நெல்லின் அளவு தொடர்பில் கவனத்தில் கொண்டு ஒரு கிலோ சம்பா நெல்லிற்கு குறைந்தபட்சம் 50 ரூபாயை நிர்ணய விலையாக விதிக்க வேண்டும் என கோரியிருந்தார்.

நிர்ணய விலைக்கு நெல்லினை கொள்வனவு செய்வதற்காக தனியார் துறையினருக்கு 8 வீத சலுகைக் கடன் அடிப்படையில் கடன் வழங்குவதற்கு அமைச்சர் யோசனை முன்வைத்துள்ளார். (ம-3)

## சிவபூமி அரும்...

பாக சிவபூமி அறக்கட்டளை அமைப்பால் அமைக்கப்பட்ட இவ் அரும்பொருட் காட்சியகத்தின் திறப்புவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை அமைப்பின் ஸ்தாபகர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் பொது அழைப்பு விடுத்துள்ளார். (ம-3)

## வல்வையில்...

கோவிலடி பகுதியில் உள்ள வீடு ஒன்று இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டது.

அங்குள்ள வீட்டில், தைப்பொங்கல் தினமான கடந்த 15ஆம் திகதி புதன்கிழமை நாகர்கோவில் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் பிரதான சந்தேக நபர் ஒளிந்திருப்பதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு ரகசிய தகவல் கிடைத்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ராணுவத்தினர் அவ்வீட்டை திடீர் முற்றுகையிட்டு சோதனை மேற்கொண்டனர். இதன்போது பிரதான சந்தேக நபரின் சகோதரரான நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த பத்மநாபன் சிந்துராஜ் (வயது - 28) என்பவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

## இராணுவத்திடம்...

காலை ஒன்று கூடிய வடமாகாண காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்று கூடி கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிசேலா பஸ்லெற் யெறியா அவர்களுக்கு நேற்றைய தினம் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த மகஜரில் மேற்படி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் கடந்த 10 ஆண்டுகளாக போராடியும் வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமான இலங்கை அரசிடமிருந்து எமக்கு நீதி கிடைக்காது என்பதனை நன்குணர்ந்துள்ள நிலையில் நாம் சர்வதேச சமூகத்திடம், ஐநா மனித உரிமைகள் பேரவை, ஐ.நா பாதுகாப்புச் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமிருந்தே நீதியை எதிர்பார்த்து நிறகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3,285)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 23-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2370
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 12 17 49 56
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 4098
ஆங்கில எழுத்து P வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 3 7 5 3 0
தேசிய லொத்தர் சபை

நீரோகா லக்ன ஜய
திகதி 2020/01/23
சீட்டிழுப்பு இலக்கம் 0653
லக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 18 31 51 68

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1579 திகதி 2020/01/23
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 41 46 55 61
தேசிய லொத்தர் சபை

ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1641 சீட்டிழுப்பு திகதி 23/01/2020
வெற்றி இலக்கங்கள் 03 66 68 69 ஆங்கில எழுத்து L
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 45,287,936
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 861 வர்ணம் : நீலம் சீட்டிழுப்பு திகதி: 2020.01.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,385,735/-
வெற்றி இலக்கங்கள் 18 31 32 44 ஆங்கில எழுத்து G

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1114
சீட்டிழுப்பு திகதி 23.01.2020 பச்சை
I 22 28 49 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 92,117,024
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23/01/2020 வெற்றி வாரம் 2747 வர்ணம் கபிலம்
மேடம் வெற்றி இலக்கங்கள் 14 28 32 52
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,190,808
2020/01/24 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
A/L 2020 மாணவர்களுக்கான
ICT | Maths(7) | Agri
Geography | Media
077 248 7774
வினாத்தாள் வகுப்புக்கள் ஆரம்பம்
25.01.2020 சனிக்கிழமை

# 19 வது திருத்தத்தை இல்லாதொழிக்கும் அரசின் அனைத்து செயற்பாடுகளையும் ஐ.தே.கட்சி தோல்வியடையச் செய்யும்

## பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு உதவிய அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் ஆதரவு வழங்காது. மாறாக அதனை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கொள்ளத்தக்க அனைத்து செயற்பாடுகளையும் பாராளுமன்றத்தில் முன்னெடுக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐ.தே.க.வின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் 2015 ஆம் ஆண்டிற்கு முன்பு வரை ஏகாதிபத்திய ஆட்சி முறையொன்றே நிலைபெற்றிருந்தது. அந்த நிலையை மாற்றி, ஜனநாயக இடை வெளியொன்றை ஏற்படுத்தும் விதமாகவே நாம் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினோம்.

ஆனால் தற்போது பதவியேற்றிருக்கும் புதிய அரசாங்கம் ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்திய 19 ஆவது திருத்தத்தை இல்லா தொழிக்க வேண்டும் என்று கூறிவருகிறது. அதன்மூலம் நாட்டில் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட ஏகாதிபத்தியவாத ஆட்சி முறையொன்றையும், ஏகாதிபத்திய தலைமைத்துவத்தையும் நோக்கி மீண்டும் நகர்வதற்கு முற்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு உதவிய அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் ஆதரவு வழங்காது. மாறாக அதனை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கொள்ளத்தக்க அனைத்து செயற்பாடுகளையும் பாராளுமன்றத்தில் முன்னெடுப்போம் என்றார்.(ம-3).

வேலைவாய்ப்பு
யாழ்.நகரில் இயங்கும் வியாபார நிறுவனம் ஒன்றுக்கு கணனி அறிவுள்ள, சராசரி ஆங்கில அறிவுள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பு.
சிங்களம் பேசத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை
(C-9047)
தொடர்புகளுக்கு:- 075 259 2067

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(1937)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8785)


சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(C-9015)



யாழ் சர்வதேச கண்காட்சியில் STALL NO C-19 24,25,26 திகதிகளில் வெள்ளி,சனி,ஞாயிறு
கனடாவில்
வேலைவாய்ப்பு/உயர்கல்வி
3 year work permits
குடும்பத்துடன் நிரந்தரமாக தங்கலாம்
வருடத்திற்கு 5000 வீசா வாய்ப்புக்கள்
அடிப்படைக்கல்வித்தகுதி :- A/L
● வயதெல்லை :- 19 முதல் 50 வரை
SRILANKAN AIRLIINES
உட்பட பல்வேறு விமான சேவைகளில் வேலை செய்வதற்கான கற்கைநெறிகள்
SriLankan Airlines
SriLankan Aviation College
STUDY IN INDIA
100% SCHOLARSHIP
இந்தியாவில்
கல்வி,தங்குமிடம்
உணவு 100% இலவச
புலமை பரிசில் வாய்ப்புக்கள்
நேரில் சந்தித்து விபரங்களை அறிந்து பயன்பெறுங்கள் 0768226243

வாருங்கள்!
இன்று ஆரம்பம்
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
FOOD & BEVERAGE
CONSTRUCTION
AUTOMOBILE
ICT
AGRICULTURE
APPAREL
JITF 2020
24th 25th 26th
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)
www.jitf.lk
jitf.lk
PLATINUM SPONSOR: INSEE CEMENT
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY
OFFICIAL PARTNERS
TELECOMMUNICATION: Telecom Mobitel
FOOTWEAR: DSI
FOOD: Rukshan
COSMETICS: British Cosmetics
POWER TOOLS: DIMO
PRINT MEDIA
ENDORSED & SUPPORTED BY
Ministry of Industry and Commerce
Jaffna Municipal Council
Consulate General of India Jaffna
PARTNER COUNTRY
India
(8950)
More information: Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com

31ம் நாள்
நினைவஞ்சலி



மலர்வு
1975 - 04 - 06
உதிர்வு
2019 - 12 - 24
கடந்த 24.12.2019 அன்று இறைபதமெய்திய
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் நடராசா பிறேமவாசன் (வாசன்)
அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி, பத்திரிகை, முகநூல் ஊடாகவும் ஆறுதல் தெரிவித்து, துயரில் பங்குகொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.
அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (23.01.2020) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றது.
இன்று (24.01.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.
இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
(C-9048)
இங்ஙனம்;
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.